REGD 4642. M.

சந்தா விபரம்
—
ஆண்டு ரூ 7,
,, 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 7—5—50 | இதழ் 45

## துடிக்கின்றனர் மக்கள்!




## தூங்குகின்றனர், சர்க்கார்!!

# "42"

துப்பாக்கிக் குண்டுகள்! அவர்கள் அஞ்சவில்லை!!

அலைகடலென, வெள்ளம்போல் திரண்டு கிடந்த அவர்கள் மத்தியிலிருந்து விண்ணும் மண்ணும் அதிர வீரமுழக்கம் எதிரொலிக்கிறது.

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை என்ற வீரப்பண் அவர்கள் உதடுகளிலே உலவ, வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்றும் கொள்வாரோ என்ற வெற்றிச் சிரிப்பு முகங்களிலே மலர அவர்கள் அணிவகுத்துச் செல்கின்றனர்.

'சாவு அல்லது வாழ்வு' எங்கள் தாரகமந்திரம், இது. 'குண்டுகள் பாயட்டும், குருதி மடமடவெனக் கொட்டட்டும், நாங்கள் கோழைகளல்ல; கோழிகளுமல்ல கொத்த வரும் பருந்தைக்கண்டு பயப்பட்டு ஓட!' என்று மிடுக்கு நடையுடன் குவிந்து கிடக்கின்றனர் படை வீரர்களாக.

போர் ஆரம்பமாயிற்று—படைகள் அணிவகுத்தன—ஆனால் ஒரு வீரன் கையிலாவது ஆயுதம் இல்லை!

ஆயுதமில்லாத போர்! தாக்குதலில்லாத சாத்வீகப் போர்!!

வயதுவந்த வாலிபர்கள். கொதிப்பேறிய மாணவர்கள், நரைத்ததலையினர், புரையோடா இதயத்தினர் எல்லோரும் படை வீரர்கள். போர் துவங்கிற்று — சிறு ஆயுதம் கூட இல்லாமல்!

—காட்சி மாறுகிறது

உரிமை முழக்கமே எங்கள் வாள்! நேர்மையே எமது கேடயம், ஆர்வமே எங்கள் அணிவகுப்பு என்று புறப்பட்டுச் செல்லும் 'சாத்விகப் படை' மீது குண்டுகள் பாய்கின்றன!

துப்பாக்கியின் கோர முழக்கம், கூடிவந்த வீரர்களைக் கலங்கவைக்கவில்லை! சுடு! சுடு!! சுடு!!! உன்கை ஓயமட்டும் சுடு! என்று, மார்பு காட்டி, 'சாவு அல்லது வாழ்வு' என்ற தங்கள் இலட்சியச் சொல்லை முழக்கிய வண்ணம் செத்து விழுகின்றனர்!

— காட்சி மாறுகிறது

பிணக்காடு! இரத்த வெள்ளம்! துண்டிக்கப்பட்டுக் கிடக்கும் உடல்கள், கால் வேறு கை வேறாகிக் கிடக்கும் கட்டிளங்காளைகள், சூது அறியா குடியானவரின் பிரேதங்கள் .........

நெஞ்சைத் துடிக்கச் செய்யும் காட்சிகள் 'குளோஸ் — அப்'பில் தென்படுகின்றன.

—காட்சி மாறுகிறது.

போலீசார் கண்களிலே கலக்கம்! ஆயுதந்தாங்கிய ராணுவ வீரர்கள் இதயங்களிலே எரிமலை! பிணக்குவியலைக்கண்டு பித்தராகி நிற்கிறார்கள்.

வெகு தொலைவிலிருந்து இன்னுமொரு மக்கள் கூட்டம் 'வெள்ளையனே வெளியேறு!' என்ற வீர முழக்கத்துடன் வந்துகொண்டிருக்கின்றது. துப்பாக்கிபிடித்த துருப்புகளைக் கண்டும், துவளவில்லை அந்தக் கூட்டம். அமைதியுடன், 'அஹிம்சையே எங்கள் ஆயுதம்' என்று கூறிக்கொண்டு வந்து கொண்டிருக்கின்றனர் ஊர்வலமாக.

ஊர்வலம் நெருங்கிக்கொண்டிருப்பதைக் காணும் போலீஸ் அதிகாரியின் கண்களில் நெருப்புப் பொறி பறக்கிறது. கைகளைத் தூக்குகிறான், துருப்புகளும் போலீசாரும் நிற்கும் திசையை நோக்கி. "சுடு" என்ற கட்டளை பிறக்கிறது.

—காட்சி மாறுகிறது

துயர நிலையை எதிரொலிக்கும் சோக மயமான பின்னணி கீதம். துப்பாக்கி தாங்கி நிற்கும் துருப்புகள், தங்கள் தோளிலிருந்து துப்பாக்கிகளைக் கையிலேந்துகின்றனர்.

போலீஸ் அதிகாரி, வெறிப் பார்வையை வைக்கிறான் 'வெள்ளையனே வெளியேபோ' என்று முழக்கமிட்டுக்கொண்டுவரும் மக்கள் மீது.

பார்த்துக்கொண்டிருக்கும் அவன் முகத்தில் திடீரென ஒரு மாறுதல்! அவன் கோர உருவம் மறைந்து, துருப்புகள் காட்டப்படுகின்றனர்.

'சுடமாட்டோம்! அவர்கள் எங்கள் சகோதரர்கள். அவர்களைச் சுடமாட்டோம்' என்று கூறிக்கொண்டே துப்பாக்கிகளை கீழே வீசுகின்றனர் ............கூட்டம் நெருங்குகிறது. போலீசாரும் துருப்பினரும் இப்போது கூவுகின்றனர், 'இது எங்கள் நாடு! இது எங்கள் நாடு!' என்று வெற்றிப்பண் முழங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில்...

—காட்சி கலைகிறது

மக்களைச் சுட்டு வீழ்த்த கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டிருந்த அதிகாரிகள் ஓட்டம் பிடிக்கின்றனர், மூச்சுத் திணற ஓட்டம் பிடிக்கின்றனர்!

—கடைசி கட்டம்

வெற்றிவிழா! அகிம்சைப்போர், நாமிருக்கும் நாட்டை நமதாக்கி விட்டது என்று எக்களிப்பும் எக்காளமும் எங்கும் முழங்குகின்றன! மக்களின் மகிழ்ச்சிப் பேயார்வத்துக்கிடையிலே,

ஒரு வியாபாரியின் உருவம் திரையிலே காட்டப்படுகிறது. அவனைக் கண்டதுமே மக்களின் ஆனந்த ஆரவாரம் ஆத்திரப் பேரிரைச்சலாக மாறுகிறது.

காந்திக் குல்லாய்

கதர் உடை

ஆகியவைகளுடன், மக்கள் எதிரில் தலைகுனிந்து நிற்கிறான் அந்த வியாபாரி. மக்கள் பேசிக்கொள்கின்றனர்.........

"நம்மோடு இருந்தானே அவன் தானே இவன்?"

"ஆமப்பா! அவனேதான் ஆளைப் பார், அசல் குள்ளநரி!"

"குள்ள நரியா!" கொஞ்சம் கிளி போலன்றோ தோற்றுகிறான்"

"ஆளைக்கண்டு மயங்காதே, அவன் ஒரு துரோகி!"

"துரோகியா? இவனா..."

"ஆமாம்! உள்ளத்தில் வஞ்சமும் உதட்டில் அன்பும்கொண்டு உலவிய உன்மத்தன்! நம்மைக் காட்டிக் கொடுத்துவந்த நயவஞ்சகன்...... கூடயிருந்தே குழி தோண்டிய கொடும்புலி! ஏகாதிபத்யதாசன்,... எத்தன்...பெரியதுரோகி!...

எங்கும் 'துரோகி ஒழிக!' என்ற கூச்சல்கள்.

"துரோகிகள்-எச்சரிக்கை!" என்று மக்களின் ஆத்திர முழக்கத்தைக் கிழித்துக்கொண்டு ஒருகுரல் ஒலிக்கிறது. படமும் முடிகிறது!

✲

பலாத்காரம் கூடாது! பயன் தராது அது, நம்மைப் படுகுழியில் ஆழ்த்திவிடும். துப்பாக்கிகள் முழங்கட்டும், துணிந்து நில்லுங்கள், சுடுபவர் நம்மவர்தானே! இன்று சுடுவார்கள் ஆனால் எப்போதும் சுட்டுக்கொண்டேயிருப்பார்கள் என்று எண்ணுகிறீர்கள்! இன்றில்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் அவர்கள் தங்கள் போக்குக்கு தலைகுனிந்து நம்முடன் சேரத்தான் செய்வார்கள். ஆகவே, ஆத்திரப்படாதீர்கள், அவர்கள் மீது பாயாதீர்கள்!

ஆத்மபலத்தால் எதையும் சாதிக்கலாம்—அதை மிஞ்சிய பலம் உலகில் வேறெதுவுமில்லை! அஹிம்சையே நமது ஆயுதம்—அதைக்கொண்டே அந்நியரை முறியடிப்போம்!!'

காந்தியார், காங்கிரஸ்காரர்களுக்கு காட்டிய நல்வழி இது.

சுதந்திரப் போராட்டத்தில் வெள்ளையரை எதிர்த்து வெற்றி காண அவர் கூறிய மார்க்கம் இது.

இந்த அஹிம்சா முறையின் பெருமை சித்தரிக்கப்பட்ட திரைப்படம்தான், நாம் தலைப்பிலே கொடுத்தது.

நடனங்கள் கிடையாது, நெஞ்சை அலையவிடும் கன்னியர்கள் நடிக்கவில்லை—இசை கிடையாது! ஆரம்ப முதல் கடைசிவரை ஒரே வீரமுழக்கம். காங்கிரசார் வெள்ளையனை எதிர்த்து நின்று வெற்றி பெற்ற சம்பவத்தைத் தொகுத்து எழுதப்பட்ட கதை. இச்சரித்திரச் சித்திரம் இந்திய பிலிம் டிரஸ்ட்போர்ட் என்ற ஸ்தாபனத்தால் எடுக்கப்பட்டது. இதை தயாரித்த டைரக்டரும் சாதாரணமான ஆளல்ல, ஆகஸ்டு கலவரத்தின்போது, அஞ்சாது நின்று ஆண்டோரின் அடக்குமுறைகளுக்கு ஆளானவர்.

இந்தப் படத்தின் கருத்து — அஹிம்சா முறையில் எதையும் வெல்லலாம் என்று மக்களுக்கு வலியுறுத்துவதாகும்.

"அஹிம்சை முறையிலேயே நாம் நடக்கவேண்டும். ஆனால், நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு இம்சையில் இறங்க நேர்ந்தால்—அது பாவமில்லை." இது, அஹிம்சாமூர்த்தி காந்தியாரின் கருத்து.

முட்டவரும் மாட்டைத் தடுக்க, கம்பு கொண்டு அடித்து நிறுத்துவது பாவமல்ல — அதாவது, தன்னைத் தற்காத்துக்கொள்ள இம்சை முறையில் ஈடுபட நேர்ந்தால் தவறல்ல.

அஹிம்சையைப் போதனை செய்த காந்தியாரே அதற்கு விதி விலக்கும் காட்டியிருக்கிறார். ஆனால் இப்படத்திலோ தற்காப்புக்குக்கூட பலாத்காரம்கூடாது! சுடுகிறானா—மார்பைக் காட்டு! குண்டுகள் துளைக்கின்றனவா? பயப்படாதே — நாட்டிற்கு நீ செய்யும் சேவையின் உச்சகட்டம் இது; என்று உயிரிழந்த பலரின் வீரநினைவு சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

வரலாறு — படமாக்கப்பட்டிருக்கிறது! இந்தியச் சுதந்திரப்போரின் ஒருகட்டம் '1942 ஆகஸ்டு கலவரம்' படமாக உருவாகியிருக்கிறது!

இந்த சரித்திரச் சித்திரம் காங்கிரஸ்காரர்களை மகிழ்ச்சியிலாழ்த்தவே செய்யும்—நாம் அன்னிய ஆதிபத்தியத்திடம் பெற்ற அடக்குமுறைத் தழும்புகளைக் காட்டும் படம் இது — நல்ல முயற்சி என்று பாராட்டவே செய்வர்.

ஆனால் இந்த நல்லமுயற்சி—கூடாததாக்கப்பட்டிருக்கிறது! '42' என்று பெயர்கொண்ட இப்படத்தை பொதுமக்கள் பார்க்கக்கூடாது என தடை உத்தரவுப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளையன் என்ன சும்மாவா இருப்பான்—அவனோடு ஆயுதமின்றிப் போராடி வெற்றி கண்ட ஆத்ம சக்தியின் அருமை பெருமைகளை விளக்கும் படமல்லவா? ஆகவே, அவனுக்குப்பிடிக்கவில்லை! தடை உத்தரவு செய்திருப்பான்—தனது நாட்டிற்குள் இந்தச் சரித்திரச் சித்திரம் வரக்கூடாது என்று உத்தரவு போட்டிருப்பான் — என்று எண்ணத்தோன்றும் நண்பர்களுக்கு.

தடையுத்திரவு போட்டது வெள்ளை சர்க்காரல்ல—படம் காட்டப்படக்கூடாது என்ற உத்திரவு பிறப்பிக்கப்பட்டதும் இங்கிலாந்திலல்ல! இங்கு!!—'ஆகஸ்டு' புரிந்து ஆட்சி பீடத்திலே அமர்ந்து ஆட்சி புரிகிறார்களே காங்கிரஸ்காரர்கள் அதே நாட்டில்தான்!

"42" என்ற படம் பொதுமக்களுக்குக் காட்டப்படும் அருகதையில்லாதது.

என்று சென்னை சர்க்கார் தடை செய்திருக்கிறது.

தேசபக்தியைக் கதையின் மையமாக வைத்து, காந்தியார் போதித்த அஹிம்சை முறையின் பெருமையை வலியுறுத்தித் தயாரிக்கப்பட்ட இச்சரித்திரச் சித்திரம் தடை செய்யப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் முக்கியப்போராட்டம் நிகழ்ந்த "42"—பொதுமக்கள் முன் காட்டப்படக்கூடாது என உத்திரவிடப்பட்டிருக்கிறது. அதுவும் யாரால "42" குறித்துப் பெருமையாகப் பேசப்பட்டு வந்ததோ, அவர்களாலேயே தடை செய்யப்பட்டிருக்கிறது.

"42"—படமாக உருவாக்கப்பட்டதும் அதைப் பார்வையிட்ட பம்பாய் பிலிம் தணிக்கை போர்டார், மக்கள் முன் காட்டலாம் என்று 'சென்சாரின்'போது வெளியிட்டனர்—படமும் பல இடங்களில் காட்டப்பட்டது!

பம்பாயில் 'சென்சார்' ஆன இப்படம் வங்கத்துக்கு வந்தபோது 'சென்சாரா'கவில்லை! மேற்கு வங்க பிலிம் தணிக்கை போர்டார் கூடி இப்படம் பொதுமக்கள் முன் காட்டத் தகுதியில்லாதது என்று முடிவு செய்தனர்—சர்க்காரும் தடை பிறப்பித்தது, நவம்பர் மாதத்தில்!

இப்போது 'கல்கத்தா' காட்டிய வழியை "சென்னை"யும் கடைப்பிடித்திருக்கிறது.

ஒரே படம்—ஒரே நாட்டில்—ஒரே கட்சியினர் ஆளும் காங்கிரஸ் ராஜ்யத்தில் பலவிதமாகப் படுகிறது கருத்துக்கு!

பம்பாயில் காட்டலாம்—மேற்கு வங்கத்தில் கூடாது! — சென்னையிலும் காட்டினால் 'ஆபத்து!'

* * *

ரஷ்யப் புரட்சி நடந்த கதையை மக்களறிவர். புரட்சிக்குப்பின் ஆட்சி இயந்திரத்தைக் கையிலே பிடித்த

செம்படையினர் தங்களது புரட்சியை ஒரு திரைப் படமாகச் சித்தரித்திருக்கின்றனர். ஜாரின் கொடுமை—அதை எதிர்த்து நிற்கும் மக்கள் படும் அவதி! துப்பாக்கிகளின் முழக்கம்—துணிந்து பலியாகும் வீரர்களின் பிணக்காடு! குழந்தைகளின் குருதி தோய்ந்த உடல்கள் — அதன்மீது ஓடியாடிச் சுடும் போலீஸ்களின் அட்டகாசம்! பெண்களின் கூக்குரல்– அவர்களைத் தள்ளி அவர்கள் உடலைப் பாலமாக அமைத்துக்கொண்டு கோரநர்த்தனம் புரியும் ஜாரின் எடுபிடிகளின் கொடுங்கோன்மை — இத்தனையும் அப்படத்தில் காட்டப்படுகிறது. இத்தகைய சரித்திர நிகழ்ச்சி முக்கியமானதெனக் கண்டு படமாக்கப்பட்டிருக்கிறது—ரஷ்ய அரசாங்கத்தால்!

"42"—இந்திய சுதந்திரப் போரின் முக்கியத்துவம் வாய்ந்தது என பறை சாற்றும் நிகழ்ச்சியை, காங்கிரஸ் ஆளவந்தாரே தயாரித்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் தயாரிக்கவில்லை! தேசபக்தியும், காந்தியடிகளின் சாத்வீக போதனையில் பலத்த நம்பிக்கையும் கொண்ட ஒருவர் படமாக்கியிருக்கிறார். ஆனால் அந்தப் படம்—சட்ட விரோதமாக்கப்படுகிறது—காங்கிரஸ் சர்க்காரால்!!

* * *

வெள்ளையர்கள் நடாத்திய வெறியாட்டம், வேதனைப்படுத்திய அடக்குமுறை ராஜ்யம், ஆகியவைகள் படத்திலே சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. தேசபக்தர்களைச் சிறையிலே தள்ளியது, கீழே தள்ளி காலால் உதைத்தது, சுட்டுத் தள்ளியது, மானபங்கம் செய்ததுபோன்ற காட்சிகள் ஆங்கிலேய ஆதிபத்தியம் தனது அதிகாரத்தர்பார் நீடிக்கவேண்டுமென்ற ஆசையால் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள்.

பயங்கரமும் வேதனையும் நிறைந்த இந்தக்காட்சிகள் படத்திலே இருக்கின்றன என்றாலும் இவ்வளவு அடக்குமுறைகளையும் சமாளித்து எப்படி இலட்சியபுரியை அடைய முடிந்தது என்பது தெள்ளத்தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

ஹிம்சையை அஹிம்சை வெல்லும்-என்ற காந்தியாரின் தத்துவம் வெற்றி பெறுகிறது என்ற எண்ணத்தோடு படம்பிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், ஆட்சியாளரோ, இந்தப் படத்தைப் பொதுமக்கள் பார்க்கக் கூடாதென தடை செய்துள்ளனர்.

படத்தின் நோக்கம் பலாத்காரத்தை சாத்வீகம் வெற்றி பெறும் என்பது — ஆனால் ஆளவந்தாரோ படத்தில் பலாத்காரக் காட்சிகள் இருக்கின்றன. எனவே காட்டுதல் கூடாது என்று அடக்குமுறை "அம்பை" வீசியிருக்கின்றனர்!

தங்கள் கட்சிச்சரித்திரப்படத்தை மக்கள் கண்ணுக்குப்படாமல் மறைக்கிறது—சர்க்கார், ஆட்சி கையிலிருப்பதால், சட்டத்தைவீசி!படமோ, காந்தியடிகளின் கருத்தை எதிரொலிப்பது! வெள்ளையரை எதிர்த்து வெற்றிகண்ட வீரர்கள்பட்ட அவதியைச் சித்தரிப்பது — அடக்குமுறையை அணைத்துக்கிடந்த ஆதிபத்தியம் முடிவில் எப்படி முறியடிக்கப்பட்டது, ஆயுதமில்லாதபோராட்டத்தின்மூலம் என்பதை விளக்குவது!

இருந்தும் இந்தப் படத்திற்குத் தடை, தங்களின் போராட்டத்தை

(7-ம் பக்கம் பார்க்க)

# ★ மடமையும் அகம்பாவமும்! ★

இந்தி விவகாரம் தமிழ் மக்களின் அமைதியை அவ்வப்போது குலைத்து வருகிறது. ஆட்சியிலிருக்கும் கல்வி இலாகா மந்திரிகள், அதிகாரிகள் இவர்கள் வேண்டுமென்றே கண்ணை மூடிக்கொண்டு வெறும் அகங்காரத்தால் ஆடுவதுதான் இதற்குக் காரணமாக இருக்கவேண்டுமே தவிர, தமிழ்நாட்டுக்கு இந்தி மொழி மிகவும் இன்றியமையாதது என்று அவர்கள் மனப்பூர்வமாக நம்பி அதைக் குழந்தைகளுக்குப் பயிற்றுவிப்பது புனிதமான கடமை என்று உண்மைபாகவே நம்பித்தான் இப்படி பாடுபடுகிறார்கள் என்று சொல்ல இடமில்லை.

ராஜாஜி மந்திரிசபை இருந்தபோது இந்தி விவகாரம். அப்போது பெரும் எதிர்ப்பு. அடிதடி சிறைக் கூடம் இவையெல்லாம் நடைபெற்றன. இது முதல் நிலை. குழப்பம்

காங்கிரஸ் ஆட்சி மாறி அட்வைசர் ஆட்சி வந்தபோது கட்டாய இந்தி—இஷ்டபாடமாகியது-யாரும் எதிர்க்கவில்லை. இந்தக் கட்டத்தில் —எனவே அமைதி. இது இரண்டாம் நிலை.

மறுபடியும் காங்கிரஸ் ஆட்சியில், அவினாசியார் காலத்தில் குழப்பம் மூன்றாவது நிலை—காரணம் கட்டாயமில்லை என்று ஒரு தடவை, கட்டாயம்தான் என்று மறுதடவை இப்படி முன்னுக்குப் பின் முரணாக இந்தியை அவர்—அவினாசி--தானே குழப்பிக்கொண்டார். இந்தத் தடவையும் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், அடக்கு முறைகள் அனைத்தும் உண்டு. கடைசியாக இரண்டுகட்சியும் ஆளுக்குக் கொஞ்சம் விட்டுக் கொடுத்தால் அமைதி ஏற்பட்டு விடும் என்ற சூழ்நிலை தோன்றியது. அதாவது மூன்றாவது பாரத்திலிருந்து இந்தி என்பது அவினாசி திட்டம். நான்காவது பாரத்திலிருந்து எக்கேடு கெட்டுப்போங்கள் என்பது எதிர்ப்புக்குரல். இதில் கட்டாயம் இல்லை போலக் காட்டுவதற்காவது முயற்சி செய்தார் அவினாசி.

அவர் போனபிறகு அமைச்சுக்கு வந்தார் மலையாள மாதவர். இப்போது முதல்பாரம் முதல் 6-பாரம் வரை கட்டாயம் என்று கூறுகிறார்கள். வீண் வேலைகளை விட்டு உருப்படியாகச் செய்யவேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கிறது. அர்த்தமற்ற திட்டங்களும், அவசியமற்ற எதிர்ப்புக்களையும் ஏன் வருந்தியழைக்கிறார்களோ தெரியவில்லை. தேசியப் போலி உணர்ச்சியில் இந்தியைப் புகுத்துவது பெரிய தியாகமென்று கருதுவது வெறும் மடமையும் அகம்பாவமுமாகத்தான் இருக்க முடியும்.

இந்தி தேவையென்று கருதுவோருக்கு அதைப் பயில வசதி செய்வதுதான் முதல்கடன். தேவையில்லை என்று கருதுவோர் தலையில் அதைச் சுமத்துவதானால், தமிழ்-இந்தி இரண்டும் விரோத மொழிகளாக மாறி என்றும் மாறாத கசப்புடன் மோதிக்கொண்டிருக்க உதவி செய்ததாகும். "சிவாஜி"

சிந்தனைத் திரை

# தனிக்கடை—ஒரு சூட்சமம்

[அரங்கண்ணல்]

“சூட்சமம்தெரியுமோ, உனக்கு?” என்று கேட்டுக்கொண்டே வந்தான் நாகன்—எனது நண்பன்—சிறிது நாளாக அவன்போக்குப்பிடிக்காமலிருந்து வரும் என்னிடம்.

“எல்லாம் தெரிகிறது”—என்றேன், சிறிது கோபத்துடன் நான். நாகன்—மண்டிக்கடை மகாதேவரின் கடையிலே கணக்கர் ஸ்தானத்திலிருப்பவன். மகாதேவர்—ஊரில் பெரிய முக்கியஸ்தர் ‘ஓகோ’ என்று வாழ்ந்து வருபவர்— அவரைப்பற்றி இவன், தாறுமாறாகப் பேசுவதும், நாலுபேரைக் கண்டால் அவர்களிடம் அவரைக் குறித்து ஏசுவதும் என் காதுக்கு எட்டியது. அதுதான் எனக்கு அவன் மீது ஏற்பட்ட ஆத்திரத்துக்குக் காரணம். கடையில், கணக்கப்பிள்ளையாக இருந்தாலும், மகாதேவர் தனது குடும்பத்தாரில் ஒருவராகக் கருதியிருந்தார், நாகனை. நாகனும் அப்படித்தான் நடந்து வந்தான். ‘விறகுக் கட்டை வாங்கிப் போட்டு, மாதம் ஒன்றாவதற்குள் தீர்ந்துவிட்டதா?’ என்று கேள்வி போடுவது முதல், “வெள்ளை’யில்விற்றால் இவ்வளவு கிடைக்கும், ‘கருப்பில்’ விற்பனை செய்தால் இவ்வளவு ‘இலாபம் வரும்’என்று யோசனை கூறுவது வரை, எல்லாக் காரியத்தையும் நாகன்தான் கவனித்து வந்தான். மகாதேவரும், நாகனைக் கேட்டுத்தான், நல்லது பொல்லது எல்லாவற்றிலும் ஈடுபடுவார். ஊரிலுள்ளோர், நாகன்—மகாதேவரை ‘அண்ணன்—தம்பி’ என்று கூட அழைப்பதுண்டு.

கள்ள மார்க்கெட் வியாபாரத்திலிருந்து, ‘காய்கறிவாங்கி’ அனுப்புவது வரை, எல்லாக் காரியங்களிலும் ஈடுபட்டுவந்த நாகன்—இப்போது அவரைப் பற்றித் தாறுமாறாகப் பேசுவது என்றால்!

தகவல் முதன் முதல்எனக்கு எட்டியதும், நான் நம்பவில்லை. “இருக்காது! எவனோ பொறாமைக்காரன் கட்டிவிட்ட புரளி” என்று கூறினேன்; ‘மனஸ்தாபம்ஏற்பட்டாலும்’ தனியாக அவர்களுக்குள்ளாகவே சந்தித்துப் பேசித் தீர்த்துக்கொள்வார்களேயொழிய, நாலு பேர் காதில பெயர் அடிபடுமாறு வைத்துக் கொள்ளமாட்டார்கள்,மானாபிமானம் தெரியாதவர்களா,— இல்லையே!” என்றுதான்எல்லோரிடமும் சொல்லி வந்தேன்.

ஆனால், ஒருநாள் நாகன்—என்னிடமே ஒப்புவிக்க ஆரம்பித்தான். அதைக் கேட்டபோது, எனக்கு அவன் மீதிருந்த ஆத்திரம்—ஆச்சரியமாக மாறிற்று!

“ஏம்பா! இவ்வளவு ஆத்திரப்படறே—நான் என்ன செய்துட்டேனும்?”

“.................”

‘அர்த்தமில்லாமெ நான் எதிலும் ஈடுபடமாட்டேன். மகாதேவரைப் பற்றி நாலுபேரிடம் நான் கன்றை பின்னானு பேசற சூட்சமம் என்னன்னா......”

“போதும்—ஒரு சூட்சமும் தெரியவேண்டாம்எனக்கு. தெரிந்து எனக்கு ஒன்றும் ஆகப்போவதும் இல்லே!”

‘உன்னை மிகவும் புத்திசாலின்னு ஊரெல்லாம் சொல்லுகிறது. ஆனால இந்தச்சின்னச்சூட்சமத்தைக் கிரகிக்கும் அளவுகூட உனக்குப் புத்தியுமில்லே, சக்தியுமில்லே!”

“நாகா! விஷபரீக்ஷை வளர்த்த நான் விரும்பவில்லை. நீயும் மகாதேவரும் ‘அண்ணன்—தம்பி’ மாதிரி பழகலே........உனக்குத் தெரியாம அவர் ஏதாவது காரியம் செய்ததுண்டா........ஒற்றுமையா இது வரை எல்லாக் காரியத்துக்கும் உடந்தையாயிருந்து இதுவரை செய்துவிட்டு, இப்போது இப்படி நீ பேசித்திரிவது......செச் சேச்சே! கொஞ்சங்கூட நல்லாயில்லே”

ஆத்திரம்வந்துவிட்டது, எனக்கு வாயில் வந்தபடி, என் வேகத்தையெல்லாம், வைத்துத் திட்டினேன். எதிர்த்து ஒருவார்த்தை கூடப் பேசவில்லை, நாகன்! பேசாமலிருந்தான். கொஞ்சநேரம் சென்றதும், ஏன் இப்படிப் பேசித்திரிகிறான், என்ற சூட்சமத்தைச் சொன்னான். திகைத்துப் போனேன்!

“மகாதேவரு, இன்னைக்கும் சரி... நான் சொல்ற வார்த்தைக்கு மறு வார்த்தை பேசறதில்லே நண்பா! இவ்வளவு ஒற்றுமையாயிருந்த எனக்கு மட்டும இருதயம் இல்லாமலா இருக்கு? அவரைப்பற்றி யாரிடமாவது பேசும்போது என் மனசு குளிருதோ? சங்கடமாத்தானிருக்கு; ‘கள்ள மார்க்கெட்டிலே கொள்ளையடிக்கிறார்! பணத்தைக் கொட்டிக் கொண்டுபோய்க் கூத்தி வீட்டுக்கு அழுகிறார் — கடையைக் கவனிப்பதே கிடையாது! காசாசை பிடிச்சுப்போச்சு,கண்டபடிகொள்ளையடிக்க நினைக்கிறார்’ என்றெல்லாம் நான் பேசும்போது. ஆனால் என்ன செய்வது? சொல்லவேண்டிய நிலே ஏற்பட்டு விட்டா,சொல்லாம இருக்க முடியுமோ! மகாயோக்கியன்தான் நீ! இன்னைக்கு அவரைப் பிடிக்கலே என்று ஆனதாப், இதையெல்லாம் பேச ஆரம்பிச்சுட்டே! நேற்று வரை இரண்டுபேரும் சேர்ந்து தானே இந்தத் திருவிளையாடலெல்லாம் நடத்தினீங்க என்று கேட்க நினைக்கிறாயா! கேள்......மகாதேவரைப்பற்றி உனக்கு நன்றாகத்தெரியுமல்லவா?”

“இதென்னடா கேள்வி? எனக்கு மட்டுமா, ஊருக்கே தெரியும்!”

“ஊருக்கு நல்லாத் தெரியும், உடைந்தகோபுரத்தைக் கட்டிவைத்தார், ‘உலகளந்தானுக்கு’ ஒரு நாள் உற்சவம் நடத்துகிறார், பெரிய பணக்காரர்! இன்னும் பலவிதமாகப் பேசுகின்றனரல்லவா ஊரார், அவரது பணப்பெருமை பற்றி!”

“ஆமாம்!”

‘உண்மை யாருக்காவது தெரியும்—எனக்கல்லவோ புரியும். ஊரார் வேஷத்தைக் கண்டுமயங்குவார்கள், அவரது உள் ‘வள்ளல்’ எனக்கல்லவோ தெரியும்!”

விளக்கினான், நாகன். கடை—காலியாகிக்கொண்டிருக்கிறது — முன்பு

போல அவர் வியாபாரம் நடைபெறவில்லை. நாணயத்தை இழந்துவிட்டார், கொள்முதல் வியாபாரிகளிடமிருந்தசெல்வாக்குச்செல்லாக் காசாகிவிட்டது! இன்னும் சிறிது நாள் போனால், திண்டாட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்......என்று அவன் கூறுவதைக்கேட்க ஆச்சரியமாயிருந்தது. நம்பாமல் நான்என்ன செய்வது! அவனே அந்தரங்க விஷயத்திலிருந்து அடுப்பங்கரை வியவகாரம்வரை புகுந்து புறப்படுபவன்!

"அது சரி, நாகா! கஷ்டகாலத்திலிருக்கிறார் என்றால், காலை வாரிவிடுவதுதான் நல்லதோ? நல்லதோ, கெட்டதோ கடைசிவரைக்கும் அவர் கூட இருந்து கஷ்டத்தையும், சுகத்தையும் அனுபவிப்பதுதானே நல்ல சினேகிதத்துக்கு அழகு! அதை விட்டுவிட்டு, கடை கல கலக்கிறது என்றதும், 'கன்னாபின்னா' என்று பேசித் திரிவது?"

"பேசாமல்......கடைசிவரை அவரோடேயேயிருந்து கஷ்டப்படணும்னு சொல்றயா?"

"இல்லே! கழுத்தைப் பிடிச்சுக் கிணத்திலே தள்ளு — போப்பா— புண்ணியவானே! நாகா, உன்னை ரொம்ப நல்ல மனசு உடையவன் என்று நம்பினேனே, நானும்! உன்னைச் சொல்றதுலே குற்றமில்லே.... உலகம், கெட்டுப்போச்சு! நம்பினவரை நட்டாற்றிலேவிடுவது ரொம்ப சகஜமாப்போச்சு!"

"நண்பா, நான் மகாதேவர் கடைக்கு வேலைக்குப்போய் எத்தனை வருடங்கள் ஆகின்றன! இத்தனை வருஷம் கஷ்டப்பட்டேனே, என்னப்பா சுகத்தைக் கண்டேன்—அவர் பெட்டிநிரம்பியது! இட்லசக்கணக்கில் கணக்கு எடுத்தேன். ஆனால், என்ன பிரயோசனம்? என்னைப்பார், அப்போதுபோலத்தான் நானிருக்கிறேன். ஆனால், அவரோ மாடிவீட்டு அதிபரானார், பெரிய பண்ணைக்காரரானார். அவர் வீட்டில் பட்டும் பட்டாடையும்—என் வீட்டில் 'மதுரைச் சின்னடி' இன்னும் மாறவில்லை. கிழிந்த வேஷ்டி — ஒட்டுப்போட்ட சட்டை......!"

"ஓகோ! நாகா, போதுமப்பாவிமர்சனம். புரிந்துகொண்டேன்! பொறாமை உன் மனதில் புகுந்துவிட்டது!"

"சட்டென்று தீர்மானித்துவிடுகிறாயே, எந்தவிஷயத்தையும். நான் சொல்வதைக்கேள், கொஞ்சம்பொறுமையாக. பின் கூறு, உன் தீர்ப்பை!"

எனக்கோ வீட்டில் குழந்தையும், குட்டியும் பெருத்துவிட்டது...... மாதம் இருநூறு சம்பாதித்தால் கூட கட்டி வர்லே' இந்த நேரத்தில மகாதேவரோடேயே ஒட்டிக்கிடந்தால் என் கதி என்ன ஆகும்? இன்னைக்கோ, நாளைக்கோ ஒருநாள் எப்படியும் அவர் 'இன்சாலவெண்ட்' ஆகத்தான் போகிறார்! அது நிச்சயம் ஒருநாள் நடைபெறத்தான்போகிறது. அப்படி நேர்ந்தால் என் நிலை என்னவாகும். ஊரிலே தலைகாட்ட முடியுமோ! 'மஞ்சள் கடுதாசி' கொடுத்துட்டான்னு அவரைமட்டுமா சொல்வாங்க. என்க்குந்தானே அந்தப்பட்டம். அவர்பாடு, பரவாயில்லை! இப்போதே தன்னிடமிருக்கும் கொஞ்ச நஞ்சம் சொத்துக்களையும் தனது மாமன் மச்சான் பெயருக்கு எழுதிவைக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார். இன்சால்வெண்ட் ஆனாகூடக் கவலையில்லே! ஆனால் என் கதி......? அவர் கடை காலியாய்விட்டா, பின் நான் எங்கே போகிறது! சினேகமா வந்து என் குடும்பத்தைக் காப்பாற்றிவிடப் போகிறது......இல்லே, சம்பாதித்தாரே சொத்து, அதிலே ஒரு பகுதியை எனக்கா எழுதித் தரப்போகிறார்...என்னமோ நீ இதோபதேசம் செய்துவிட்டாய் ... இதையெல்லாம் கொஞ்சம் நினைத்துப்பாரேன்."

நாகன் பதில், என்னை ஊமையாகச் செய்தது! நியாயத்தை முரட்டு வாதத்தால் மூடிவிட முடியுமா! பேசாமலிருந்தேன்.

"என்னப்பா ஒண்ணும் வாயைத் திறக்கமாட்டேங்கிறீயே!"

"நாகா! நீ சொல்றது சரிதான், அதற்காக அவரை ஏன் இப்படி அநாவசியமாகக் கண்டபடி பேசித் திரியணும். தூற்றல் புராணம் படிப்பதால் துன்பமா தொலையப்போவுது!'

"சரியான கேள்வி நண்பா! இதில்தான் நான் சூட்சமம் இருக்கிறது என்று சொன்னேன். நான் அவரோடேயேயிருந்தால், கடை காலியாகி கடன்காரர்களிடமிருந்துதப்ப அவர் 'இன்சால்வெண்ட்' கொடுத்தால் அவருக்கு ஏற்படும் கெட்டபெயரில், எனக்கும் கெட்டபெயர்தானே மிஞ்சும்!"

"ஆமாம் சந்தேகமா!"

'பின்னர் ஊரிலே என்ன சொல்வார்கள், என்னைப்பற்றி?"

"மோசமான ஆளப்பா! மகாதேவருடைய கடையைத்தீர்த்துக் கட்டிய மகானுபாவர்களிலே ஒரு ஆளப்பா என்றெல்லாம்......"

"தூற்றுவார்கள்! நான் எங்கு சென்றாலும் கெட்ட பெயர்தான் கிடைக்கும்......ஆனால், இப்போது கடையிலிருக்கும்போதே நாலு பேரிடம்......"

"அவரைப்பற்றித் தூஷணையாகப் பேசினால்......?"

"அப்போதேசொன்னான்யா, இந்த மனுஷன்! கள்ளமார்க்கெட்டிலே விற்று, காசைச்சம்பாதித்து, கனகத்திடமும் காஞ்சனாவிடமும் கொட்டித் தின்கிறார்......கவலைப்படவே இல்லை கடையைப்பற்றி என்று தலை, தலைன்னு அடிச்சிட்டான்......ஆனா, என்ன பிரயோசனம்! அந்தமனுஷன் இவன்வார்த்தையை எடுத்தானா! எடுத்திருந்தால் ஏன் இக்கதிக்கு வர்றான்...என்றெல்லாம் பேசுவார்களல்லவா? என்னைப்பற்றி!"

"சபாஷ்! நாகா! சரியான தந்திரம் தான். ஆனால்...உண்மையாகவே நீ ஊராரிடம சொல்லித் திரிவதற்குப் பதில், மகாதேவரிடமே கூறினால் என்ன?"

'எப்படிமுடியும்! சொன்னால்தான் கேட்பாரா, சொல்லத்தான் முடியுமா! தலைக்குமேலே வெள்ளம் வந்துட்டுதே-தடுத்துவிடவா முடியும்!"

"அதுவும் சரிதான்!"

"இதையெல்லாம் யோசித்துத்தான், நான் இந்த முடிவிற்கு வந்தேன்...இப்போதே அவர் இப்படி நடக்கிறார், அப்படி நடக்கிறார்னு சொல்றது ஊரிலே! விஷயம் அவர் காதுக்கு எட்டி, கூப்பிட்டுக்கேட்டா 'ஆமாம்னு' சொல்றது — கொஞ்சம் இரைவார், வேகமாகப்பேசுவார்! சரி உங்கிட்டேயிருக்க இஷ்டமில்லே எனக்குன்னு சொல்லிட்டு வந்துடறது—இல்லேன்னா அவராகவே 'போ, வெளியே!'ன்னாலும், போறேனுங்க, நியாயத்தைச் சொன்னேன் நீங்க விரட்டுறீங்க, பரவாயில்லே'ன்னு நாலுபேரு காதிலே படும்படியாகூசல் போட்டுட்டு வந்துவிடுகிறது!"

"வந்து......"

"தனியா ஒரு கடை வைக்கிறது—கொஞ்சம்முதல் எங்கேயாவதுதேடி! நல்ல காரியத்துக்காகச் சண்டை போட்டேனுங்க...அவரு என்னை விரட்டிட்டாரு! உலகம் என்னு இருண்டா போய்விட்டது! உங்களைப்போல, நாலு நல்லவங்க இல்லியா பிச்சை எடுத்தாவது பிழைச்சுக்குவேன்ம் — அக்கிரமமா சம்பாதிச்சு, அநியாயமாய்ச் செலவழிக்கிற ஆள் கிட்டே இருக்கப்பிடிக்கலே - ஒரே சொல்! போறேன்னு வந்துட்டேன்" என்று முக்கியமான ஆளுங்க கிட்டே சொல்றது. நல்ல பெயரோட, நம்ப காரியமும் சித்தியாகும். கஷ்டப்பட்டு கட்டெறும்பாத் தேயறதுக்குப் பதில்...ஏதோ, சுகமா நமக்கென ஒரு கடை வைச்சுகிட்டு..."

நாகன், தன் திட்டத்தை விளக்கியதும், அவன் கூறிய சூட்சமத்தைப் புரிந்துகொண்டேன். ஆச்சரியம் ஏற்பட்டது; அசகாய சூரனாயிருக்கிறயே, நாகா! உன்னை நான் என்னமோன்னு நினைச்சிருந்தேன், இத்தனை நாளும். இப்பவுல தெரியுது உன் தந்திர சாமர்த்தியம்" என்றேன்.

"நண்பா! நீயுந்தானிருக்கிறாய் பேனாவும் கையுமாய்! பிரயோசனம்? தினசரி நீ பேப்பர்லே வர்ற செய்திகளையும், நாட்டு நடப்புகளையும் கவனிக்கிறவன்தானே நீ?"

"அதுதானேப்பா, எனது அன்றாடத்தொழில்!"

"தொழிலாக இருந்து என்ன பிரயோசனம்—இந்தச் சூட்சமம் உன் புத்தியில் பட்டதா—இவ்வளவு தூரமல்லவா விளக்கவேண்டியிருக்கிறது நான்!"

"உன் சூட்சமத் திட்டத்துக்கும் நாட்டு நடப்புக்கும்என்னப்பா சம்பந்தம்?"

இதற்கு அவன் தந்த பதில், இன்னும் என்னை ஆச்சரியத்தில் மூழ்கச் செய்தது.

ஐக்கிய மாகாணக் காங்கிரசில் பிளவு, ஆந்திரகேசரி பிரகாசத்தின் புகார், திருவாங்கூர் குமரன் ராஜினமா—இதுபோலச் செய்திகள் வருகின்றனவல்லவா, பத்திரிகைகளில்—இப்போது! அதுதான் அவனுக்கு இத்தகைய திட்டத்தைத் தீட்டும் புத்தி தீட்சணியத்தைத் தந்ததாம்.

கூறினன் அவன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை!

நாகா! விஷயத்தைக் கொஞ்சம் விளக்கப்பா! பத்திரிகைப் பசியைத் தீர்க்க ஒரு விஷயமாவது கிடைக்கும்—இதை வைத்தே ஒரு கட்டுரை தயாரித்துவிடுகிறேன் என்றேன் அவசர ஆசையோடு.

'எல்லாம் என்கதையைப் போலத்தான்!' என்று சொல்லிவிட்டு ஆரம்பித்தான் "என்ன நண்பா! யாராவது லாபமில்லாமல்எந்தக்காரியத்திலாவது இறங்குவார்களா?" என்று கேள்வியைக் கேட்டுக்கொண்டே விளக்கினன்.

"இப்போது அடிக்கடி-இதுபோலப் பல மாகாணங்களிலிருந்தும் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றனவல்லவா? ஒவ்வொரு மாகாணத்திலும் யாராவது ஒரு பெரிய காங்கிரஸ் பிரமுகர் அந்த மாகாணத்து மந்திரி சபைமீது குற்றஞ் சுமத்தினர்—மேலிடத்துக்குப் புகார் செய்தார்—என்றெல்லாம்! இதன் உள்நோக்கம் இதுதான்!

காங்கிரஸ் கரைந்துகொண்டு வருகிறது-விரைவில் அதனுடைய செல்வாக்குச்செல்லாக்காசாகிவிடும் என்ற காட்சி அரும்பிவிட்டது! ஆகவே, காங்கிரசில் நேற்றுவரை பதவிகள் அனுபவித்துப் படாடோபமாக வாழ்ந்துவிட்டு ஏதோ காரணத்தால் ஏமாற்றம் அடைந்ததும், தங்கள் நிலைமையைச் சரிசெய்து கொள்ளத் திட்டம் தயாரிக்க வேண்டியவர்களாகி விட்டார்கள்!

காங்கிரஸ் போக்குப்பிடிக்கவில்லையென்று ராஜினமா செய்துவிடலாம்—ஒரே நிமிஷத்தில்! அதனுல் லாபம்? பேசாமல் மூலையில் போய் உட்கார்ந்திருக்க வேண்டியது தானே! ஆகவேதான், தங்களது 'பத்தினிப் பெருமை'யை நிலைநாட்டிக் கொள்வதற்காக, பலருக்குத் தெரியும்படியாகத் தனதுகட்சியினர் மீது குற்றம் சுமத்தத் தலைப்பட்டிருக்கிறார்கள். குற்றங்கள் விசாரணையானல்—மக்கள் கூறுவார்கள் 'பிரகாசம் எவ்வளவு தியாகி தெரியுமா? தன் கட்சியினர் என்று சிறிதுகூட வித்தியாசம் பாராமல் நாட்டு நலன் சீரழியக்கூடாது என்று சண்டை போட்டார்!' என்று கூறுவார்கள்.

தனது போக்குப் பிடிக்கவில்லையென்று மேலிடம் நடவடிக்கையெடுத்துக்கட்சியிலிருந்து 'வெளியே போ!' என்று சொன்னல், வெளியே வந்ததும் மக்களிடம் கூறலாம் 'நான் நியாயத்துக்காகப் போரிட்டேன்—

(11-ம் பக்கம் பார்க்க)

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

விவரிக்கும் ஒரு சரித்திரச்சித்திரம் மக்கள் பார்வைக்குப்படாமல் மறைக்கப்படுகிறது!

ஏன்? இது ஏன்?

'துரோகி'கள் பலர் தங்களின் சகாக்களாக இருக்கிறார்கள் என்பதா?

'காட்டிக் கொடுத்தவர்கள்' "கதர்ப்போர்வை"யில் இன்னும் தியாகிகளாக இருக்கிறார்கள் — அவர்களை அறிமுகப்படுத்தக் கூடாது மக்களிடம் என்பதா?

பலாத்கார சர்க்கார் என்றுவது ஒருநாள் அழிந்தே தீரும் என்பதைப் படம் போதிப்பது பிடிக்காததாலா?

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் போலவே அடக்கு முறைகளை நாமும் கையாள்கிறோம் என்ற பயத்தாலா?

அடக்கு முறையில் ஈடுபடும் தங்கள் ஆட்சியை எதிர்த்து, தாங்கள் கையாண்ட பழையமுறையைக் கடைப்பிடித்து மக்கள்சாத்வீகப்போராட்டம் துவங்கிவிட்டால் 'பீடம் நிலைக்காதே' என்ற பீதியினலா?

கேட்கத்தான் தோன்றும், தங்கள் சரித்திரத்தை மறைக்கும் இந்த 'சத்திய சந்தர்களை'!

தனது சரித்திரத்தையே மறைக்க வேண்டிய அளவுக்கு வெட்கம்வந்து விட்டதுபோலும், இந்த ஆட்சியாளர்களுக்கு! "42"ல் நடைபெற்ற தடியடி தர்பாரையும் அதைஎதிர்த்து தாங்கள் போரிட்ட நாட்களையும் மறைக்க முயற்சிக்கிறார்கள்!

அவ்வளவு தூரத்துக்குச் சென்றிருக்கிறது இந்த ஏழைப்பங்காளரின் "அடக்குமுறை!"ப் போக்கு.

வெட்கம்! வெட்கம்!!

*

# திராவிட நாடு

ஞாயிறு] 7—5—50 [காஞ்சி


## மணிவாசகம்

✲

"தனிப்பட்டோர் சுதந்திரம் மிகவும் அருமையானது. பெரும்பான்மையினர் தங்கள் மெஜாரிடி பலம் மூலம், அதைத் தட்டிப் பறிக்காமல் அவசியம் பாதுகாக்கவேண்டும்."

இந்தக் கருத்துரை வழங்கியவர் அரசியல் தலைவரல்ல— பம்பாய் உயர்நீதிமன்றப் பிரதம நீதிபதி சாக்லா, அண்மையில் பூனாவில் பேசியபோது குறிப்பிட்டிருப்பது, இது.

சுதந்திரம் — மக்களுடைய பிறப்புரிமை. அந்தப் பிறப்புரிமை, காப்பாற்றப்படவேண்டும். காட்டாட்சிக்கு ஆளாகிவிடக்கூடாது என்று எச்சரித்திருக்கிறார் அவர்.

காங்கிரஸ்காரர், உரிமைப் போராட்டத்தின்போது, இத்தனிப்பட்டோர் சுதந்திரம் குறித்து இட்ட முழக்கங்கள் ஏராளம்! தடியடி, சிறை, துப்பாக்கி, தனி மனிதனின் உரிமைகளைக் கொள்ளை கொண்டபோது எழுப்பிய கண்டனங்களும், எதிர்ப்பும் — அவர்கள் சுயராஜ்யப் போரின் வளர்ச்சிக்கு ஏதுவாக இருந்தன.

மக்கள் சேர்ந்தது நாடு—பல மரங்கள் கொண்டது சோலை என்பது போல்! சோலையின் மரங்களுக்குத் தொல்லை தந்து வெட்டி வீழ்த்தினால், சோலையின் அழகு மங்கும் — அதைப்போலவேதான் தனிப்பட்ட மனிதனுடைய சுதந்திர வாழ்க்கையில் சூறாவளி ஏற்படுமாறு செய்தால் —நாடு, காடாகுமே தவிர, நல்ல நிலை ஏற்பட முடியாது!

இப்படித்தான் முழக்கமிட்டனர், இன்று ஆளவந்தார் ஆனவர்கள், அன்று உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது!

ஆனால், இன்றோ! சுதந்திர நாட்டில், சுதந்திரம் செல்லாக் காசாகி வருகிறது!!

இதை எடுத்துக் காட்டுவது போலவே, பிரதம நீதிபதியார் பேசியிருக்கிறார். பேசியதோடு மட்டுமல்ல, மனிதசுதந்திரத்தைப் பெரும்பான்மையினர், தங்கள் சக்தியைக் கொண்டு தட்டிப் பறிக்காமலும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சாக்லா, கூறுவது போல அரசியலில் முதன்மை ஸ்தானம் பெற்ற காங்கிரஸ், ஆட்சியில் அமர்ந்த நாள் முதல், தனது இஷ்டப்படியெல்லாம் வீசி வருகிறது, அடக்குமுறை அம்புகளை!

பல சட்டங்கள்—மனிதனின் உரிமை மீது ஈட்டிகளாகப் பாய்ந்து கொண்டேயிருக்கின்றன!

சட்டசபை முதல், எல்லாவற்றிலும் தாங்களே மெஜாரிடியாகயிருப்பதால், சட்டம் கொண்டுவந்து, தங்கள் விருப்பப்படி நிறைவேற்றிக் கொண்டும் வருகிறது இதன் காரணமாகவே சட்டத்துக்கு இருக்க வேண்டிய மதிப்பு மங்குவதோடு— நாட்டில் அராஜகமும் அட்டூழியமும் தலைதூக்க ஆரம்பித்துவிட்டன! தாங்கள் விடுத்த சட்டங்கள் மீறப்படும்போது, துடிக்கின்றனர்.

"பாருங்கள்! பாருங்கள்!! சட்ட விரோதிகளை! நாட்டைக் கெடுப்பவர்களை!" என்று அலறுகின்றனர்—ஆளவந்தார். இது குறித்துச் சாக்லா அவர்கள்,

"சட்ட சபையில் சிறுபான்மையோர் எதிர்த்தாலும், அதைத்தாண்டி அச்சட்டம் அமுலுக்கு வந்துவிடுவது பெரிய காரியமல்ல. சட்டமாக நிறைவேறியவேளையில், அது, சிறுபான்மையினரின் ஒப்புதலைப் பெற்றதாக இருக்கவேண்டும்"

என்று கூறியுள்ளார். ஆனால், இது, நடைபெறவில்லை! அவசர அவசரமாக நினைத்தபோதெல்லாம் அவசரச் சட்டங்கள் புறப்படுகின்றன— அம்புறாத்தூணியிலிருந்து புறப்படும் அம்புகளைப் போல! அவசரச்சட்டம் பிறப்பிக்கப்பட்ட கொஞ்ச நாட்களுக்கெல்லாம், மசோதா உருவாகி, ஒரு சிறு மாற்றம் கூட இல்லாமல் சட்டசபையில் படிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டுவிடுகிறது!

மெஜாரிடி பலம் தங்கட்கிருப்பதால், இது இன்றைய ஆளவந்தார்களுக்கு மிகவும் எளிதாயிருக்கிறது.

எனினும், உரிமைகளை இழப்போர் —உறுமும் புலிகளாகத்தான் ஆகி வருகின்றனர்! அடாது, ஆகாது என்று ஆட்சியாளரின் போக்குக் கண்டு கொதித்து எழும்பும் எரிமலையாகிக்கொண்டுதானிருக்கின்றனர். மெஜாரிடி பலமும், தங்களைத் தட்டிக் கேட்க எவரும் இல்லையென்ற துணிவும் இருக்கிற காரணத்தால், இன்றைய ஆளவந்தார் வெகு வேகமாக எதேச்சாதிகாரப் பாதையில் ஆட்சி இரதத்தை ஓட்டிச் செல்கின்றனர்.

'இது தகாது! எதேச்சாதிகாரப் போக்குக்கூடாது—சுதந்திர உரிமைகளைப் பறிக்காதீர்—தொல்லைகளை எங்கள் மீது வீசாதீர்!' என்று நம் போன்றோர் கண்டன முழக்கம் எழுப்பினாலோ, சட்டத்தைத் துணைக்கொண்டு, நம்மை நோக்கி நீட்டுகின்றனர்—துப்பாக்கிகளை! பேசாதே! நடிக்காதே! நாடகம் ஆடாதே! எழுதாதே! என்று வீசிக்கொண்டே இருக்கின்றனர் — அடக்கு முறைக் குண்டுகளை. இதுபற்றி கூறுகிறார், அவர் — ஒரு மாகாணத்தின் நீதி கர்த்தா—

"தாங்கள் மெஜாரிடியாக இருக்கும் காரணத்தால், ஆளும் கட்சியினர் கொண்டுவரும் ஒவ்வோரு சட்டத்தையும், பத்திரிகைகள் மூலமும் பொதுக்கூட்டங்கள் மூலமும் எதிர்த்து தங்களது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க மக்கள் உரிமையுடையவர்கள்." என்று கூறுகிறார்.

தங்கள் ஆட்சேபங்களைத் தெரிவிக்க உரிமையுடையவர்கள் மக்கள்! கூறுகிறார் பிரதம நீதிபதி!! ஆனால் இந்த 'நீதி' இருக்கிறதா, பதில் சோகமாகத்தானிருக்கும், இச்சுதந்திர நாட்டில்! அதோடுகூட, எதிர்ப்பு, கண்டனம் ஆகியவைகளைத் தாண்டி ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டால், அதை மாற்றியமைப்பதற்காகப் பாடுபடவும் மக்களுக்கு உரிமையிருக்கிறது என்று, மிதனிவாகத் தனது விளக்கவுரையில் வெளியிட்டிருக்கிறார், நீதிபதி. இருக்கிறது உரிமை! ஆனால், எங்கே அந்த 'உரிமை' நடமாட முடிகிறது! 'உரிமை' பேசினால்தான் ஊராள்வோர் அடக்குமுறை உறுமிக் கொண்டு வருகிறதே!

X X X

மக்களின் உரிமைகள் குறித்து

பிரதம நீதிபதிதந்த மணிமொழிகள் —இந்நாட்டில் நிலவும் நிலையின் எதிரொலிகள்! வேதனைகளைத்தான் அவர் வேற்றுருவில் காட்டியுள்ளார் —மக்களுக்கு உரிமைகளைப் பற்றி விளக்கியும், சர்க்காருக்கு அவர்களது கடமைகளைக் குறித்து எச்சரித்தும், கூறுவதுபோல! தனி நபர் சுதந்திரம் குறித்து சங்கநாதம்செய்தோர் ஆட்சியில், மனித சுதந்திரம் மண் தூசியாகி வருகிறது — மதிப்பிழந்து வருகிறது!

அடக்குமுறை வீச்சும், அதட்டல்பேச்சும் அதிகரிப்பதோடு கேட்டால் பதில் வாயிலிருந்து வருவதில்லை!—துப்பாக்கி மூலம் கிடைக்கிறது!!

சர்க்காரின் விபரீதப் பாதையிலிருந்து தப்பும் வழிகளைக் குறித்துத்தான் சாக்லா கூறுகிறார், சட்டம் செய்தாலும் அதை மாற்றியமைக்க பாடுபட்ட மக்களுக்குஉரிமையிருக்கிறது என்பதாக!

சிந்தியுள்ள மொழிகள் இன்றைய ஆளவந்தாரின் போக்கு, நீதிபதிகளிடையே கூட எத்தகைய மனநிலையை சிருஷ்டித்திருக்கிறதுஎன்பதற்கோர் எடுத்துக்காட்டு. மக்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்பற்றிய ஒரு மணிவாசகம். ஆட்சிபீடமேறியோருக்கு ஒரு அறிவுரை!

✻

## கரியாகிறது

—✻—

சர்க்காரின் பொக்கிஷம்!—மக்கள் பாடுபட்டுச் சம்பாதித்துச் செலுத்திய வரித்தொகைகளில் நிறைந்தது. மக்கள்செலுத்தும் வரியைக்கொண்டு நாட்டில் நலன்கள் மலரச் செய்வதே ஒரு அரசாங்கத்தின் முக்கியகடமை.

அதைவிடுத்து, மக்கள் ஏதோ தந்தார்கள், இப்போது கேட்க அவர்கள் யார் என்ற எண்ணத்தில் இஷ்டம்போல வரிப்பணத்தைக் கரியாக்கினுல், கொடுங்கோன்மை நிறைந்த சர்க்கார் என்று எளிதில் பழி சுமத்தப்படுவர்.

நெஞ்சில் வஞ்சமில்லாமல், விபரமறியாத காரணத்தால், வீண்வழிகளில பணம் விரயமாகிக்கொண்டிருக்குமேயானுல், அந்தச் சர்க்கார் ஆளத்தெரியாதது—நிர்வாகம் என்பதன் அரிச்சுவடிகூட அறியாத அரசாங்கம் என்று தூற்றப்படும்.

இந்த ரகத்தில் சேர்ந்தவர்களே இந்திய சர்க்கார் என்று இங்குஅடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சிகள் நிரூபித்து வருகின்றன.

ஆகாய விமானப் பயிற்சி நிலையமொன்று அலகாபாத்தில் இருந்து வருகிறது. இந்த நிலையம் சர்க்காருடையதாகும் விமானப்பயிற்சி தந்து விமானிகளாகப் பலரைத் தயார் செய்வதே இந்த நிலையத்தின்வேலையுமாகும். இந்தநிலையம் கடந்த இரண்டு ஆண்டுகளாக இருந்து வருகிறது. இரண்டுஆண்டுகளில்ஆகாயவிமானப் பயிற்சி தரும் இந்நிலயத்துக்கென 1½-கோடி ரூபாய்கள் செலவழிந்திருக்கின்றன எத்தனைபேர் விமானிகளாகப் பயிற்சி பெற்றிருக்கின்னர் தெரியுமா, இந்த இரண்டரை ஆண்டுகளிலும்! சரியாக 30 பேர்! 2½ கோடி ரூபாய் செலவழித்து 30 பேர் விமானிகளாக்கப்பட்டிருக்கின்றனர். இதற்குச் செலவு ரூபா 2½ கோடி!

அதாவது ஒரு விமானிக்கு ரூ. **1,50 000** என்ற விகிதத்தில் செலவழிக்கப்பட்டிருக்கிறது, சர்க்காரால்.

ஆனல் அதே நேரத்தில், இந்தியாவில் தனிப்பட்டோர் நடத்திவரும் விமானம் ஓட்டக் கற்றுத்தரும் சங்கங்கள் ஒரு விமானியைத் தயாரிப்பதற்கு செலவழிக்கும் தொகை ரூ. 20,000தான்! இதற்கு ஒன்பது மாதங்களே போதும்!!

தனிப்பட்டோர் நடத்தும் சங்கங்களைவிட 7 மடங்கு அதிகமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது,பொது மக்களின் பணத்தை விரயமாக்கியிருக்கிறது இந்திய சர்க்கார்.

இவ்விதம் பணம் விரயமாக்கப்படவேண்டும் என்ற எண்ணத்துடன் சர்க்கார் நடந்துகொண்டதன் விளைவு என்று குற்றஞ்சாட்ட விரும்பவில்லை நாம்.

நிர்வாகச் சிரத்தையில்லை!—கவனமில்லை; தங்களது பொறுப்பைக் கவனித்து கடமையாற்ற வேண்டுமே யென்றே பயம் மந்திரிகளிடமும் மில்லை, அதிகாரிகளிடமுமில்லை! அவ்வளவு மோசமாயிருக்கிறது, இந்த இரண்டு ஆண்டு சுயராஜ்யத்தில மக்களின் நிலைமை' நாட்டின் பிரஜை — ஏழை துடிக்கிறுன். அவன் தந்த வரிப்பணமோ கரியாகிறது! ✻

### மன்னிக்கமுடியாது

12-ம் பக்கத் தொடர்ச்சி

அதிகாரிகளும், அங்கத்தினர்களும், அவர்களுக்குக் காந்திஜியிடம்உள்ள அன்பையும், தேசபக்தியையும் காட்ட, அவர்கள் சொந்தப் பணத்திலிருந்து எத்தனை ஆயிரம், அல்லது, லட்சம் வேண்டுமானுலும் கொடுத்துக்கொள்ளலாம். அதை எல்லோரும் மனமார ஆனந்தமாக வரவேற்பார்கள். ஆனல், கார்ப்பொரேஷன் வரிப்பணத்தை இவ்வாறு அள்ளிவிட அவர்களுக்கு என்ன உரிமையிருக்கிறது. அந்த ஸ்தூபிக்குக் கொடுத்த 50,000 ஆயிரம் ரூபாயைக்கொண்டு சென்னை நகரை எவ்வளவோ சீர்திருத்தலாம். ஏன்? காந்திஜிக்கு மிகவும் பிரியமான தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பயன்படுத்தலாம். மிருகங்கள் வசிக்கத் துணியாத அவ்வளவு கேவலமான நிலைமையிலுள்ள சேரிகளைச் சீர்திருத்தஞ் செய்வதில் செலவு செய்தால்எவ்வளவோ நலமாக இருக்கும். மேலும், இன்று காந்திஜி ஸ்தூபிக்கு 50 ஆயிரத்தை அள்ளிவிட்டதால், இந்தக் காரணத்தைக் காட்டி வேறு ஞாபகச் சின்னங்களுக்கு அதிக நன்கொடை கேட்டுத் தீர்மானம் கொண்டுவரலாம். இதனுல் அனுவசியமான சர்ச்சைக்கு இடமேற்படும். அதிக தொகையை நன்கொடையாகக் கொடுக்க வேண்டிவரும். இவ்வாறு ஒவ்வொரு ஞாபகச் சின்னங்களுக்கும் இப்படியே ஊரார் நெய்போல் அள்ளி விட்டுக்கொண்டே இருந்தால் கார்ப்பொரேஷன் நிதி நிலைமைதான் என்ன ஆவது? கார்ப்பொரேஷன் நிர்வாகத்துக்கே பணம் பஞ்சத்திலிருக்கும் போது எதற்காக ஊதாரித்தனமாகப் பணத்தை அள்ளிவிடவேண்டும்? கார்ப்பொரேஷன் அங்கத்தினர்களோ அவர்கள் பொறுப்பை உணர்ந்ததாகத் தெரியவில்லை. இது அவர்கள் சென்னை மக்களுக்குச் செய்த ஒரு துரோகமேயாகும். இந்தத் துரோகத்தைக் கண்டிக்காமல், சென்னை சர்க்கார் அனுமதித்தது சர்க்கார் செய்த துரோகமாகும். வரி கொடுக்கும் சென்னை மக்கள் இதை மன்னிக்க முடியாது.”

✻

# கண்ணிருந்தும்............!

நாசவேலைக்காரர்கள்!—

அடுத்த தேர்தலுக்காக அச்சாரம் போட்டுக்கொண்டு, தென் ஜில்லாக்களில் உலவி வரும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜ், சுலபமாக இந்த அம்பை, நம்மீது வீசி வருகிறார். காமராஜ் கருத்துக் குருடரல்ல, கண் கெட்டவருமல்ல! இந்தச் சொல்லின் பொருள் அறியாதவரும் அல்ல! நாசவேலை—அவருடைய 'மாஜி' தேசியத் திரு பணி. எனவே, அதன் அர்த்தமும், அது அடங்கியிருக்கும் விளைவுகளும் அறிந்தவர்தான். எனினும், வீசுகிறார் இந்த அம்பை வேகமாக நம்மீது!

நாசவேலை—நாட்டின் நல்ல நிலையைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குவது. நாட்டைக் காடாக ஆக்குவது; நல்ல மலர்ச் சோலையைச் சிதைப்பது என்று நாம் எடுத்துக் காட்டி வருகிறோம்.

நாச வேலைகளில் ஈடுபடுவது கூடாது என்று, இன்றல்ல, எப்போதுமே வலியுறுத்தி வருகிறோம். நாசவேலை - நமக்குப் பிடிக்காத ஒன்று. எனினும், நண்பர் காமராஜ், நாசவேலைக்காரர்கள் என்ற அம்பை நம் மீது வீசுகிறார்!

கம்யூனிஸ்டுகள், இந்துமகாசபைக்காரர்கள், ஆகியோருடைய போக்கைக் கண்டிக்கும் நேரத்தில் 'கூட்டோடு போடு கோவிந்தா!' என்று சொல்வார்களே, அதுபோல, நம் மீதும் கொஞ்சம் பாய்ந்து பார்க்கிறார்!

நமது பணி—நாட்டைக் கெடுத்து நல்ல நிலைமையை மோசமாக்கி, நாசப் பாதையில் கொண்டு விட்டுவிடுமாம்—கூறுகிறார், அவர், துணிச்சலோடு, மேடை கிடைத்தபோதெல்லாம் கூறித் திரிகிறார்.

வீம்பையே தன் வேலையெனக் கொண்டு திரியும் வீணன், வீதி வழியே போய்க்கொண்டிருக்கும் எல்லோரையும், வீண் வம்புக்கிழுத்து — நல்லோரையும் பொல்லோரையும் ஒரே ரகம் என நினைத்து, வம்பு செய்வானே, அந்த ரகத்தில் சேர்ந்தவரல்ல, காமராஜ்! தமிழ்நாட்டின் காங்கிரஸ் தலைவர்—தனது நாட்டின் நிலையையும், அங்குள்ள மக்கள் நிலையையும், அவர்கள் மத்தியில் தென்றல் உலவுகிறதா, புயல் வீசுகிறதா என்பதையும், நன்றாக அறியவேண்டிய பொறுப்பிலிருப்பவர். எனினும் தயங்காது நம்மீது வீசுகிறார், பழிச் சொல்லை—நாம் நாச வேலைக்காரர்களாம்! நமது பணி, நாட்டில் கேட்டைச் சிருஷ்டிப்பதாம்!!

X X X

சாதிகள் ஒழிந்து, சமரசம் பரவ வேண்டும். வல்லான், வளைந்தவனை மிரட்டி உருட்டி வாழ்தல் கூடாது. மாடி வீடு—மண் குடிசைகளை அடக்கி ஒடுக்கி வாழ்வது தகாது.

ஆளவந்தார், ஆட்சிபுரிபவர்களாக இருக்கவேண்டும்; 'அங்காடிக்கடைக்காரர்'களாக ஆகிவிடக் கூடாது.

சுயநலத்துக்காகப் பேரம் பேசி, தான் பிறந்த நாட்டை, இன்னொருவன் காலடியில் கொண்டுபோய்ச் சரணடையச் செய்வது, தடுக்கப்பட்டாகவேண்டும். மனிதன்—மனிதனாக வாழ வேண்டும், நல் வாழ்வு பெற்று, நாடு, நல்ல மலர்ச் சோலையாக வேண்டும்.

அன்பு தவழ்ந்து விளையாட, இருப்பவன் இல்லாதவன் என்ற பேதமில்லாத புது வாழ்வு மலர வேண்டும்.

இவைகளே நமது இலட்சியங்கள் என்று கூறிக்கொண்டு நாம் பவனி வருகிறோம்—நமது பணிக்கு நல்ல வெற்றியும் கண்டு வருகிறோம்.

நேர்மை, நீதிக்காகப் போராடும் நமக்கு, மக்களிடம் கிடைக்கும் வெற்றியைக் காணும் விருதுநகரார்—நம்மை வெறியர்கள் என 'விருது' சூட்டி அழைக்கிறார்!

பட்டம் பதவியல்ல எங்கள் இலட்சியம், ஓட்டு வேட்டையல்ல எங்கள் கட்சி வாழ்வு என்று உரத்துக் கூறி விட்ட பின்னரும், பாவம், காமராஜ் கண்ணிருந்தும் காணாதவராகிறார்

மக்கள்முன் கையேந்தி, வோட்டுப் பிச்சை கேட்பதற்கான வாயிலை, வழியாக நாம் திறந்து தந்திருக்கிறோம் காங்கிரஸ் கட்சிக்கு.

தென்னாட்டின் தலைசிறந்த எதிர்க் கட்சியாக நாமிருந்தும்—தேர்தல் அல்ல எங்கள் இலட்சியம் என்று பிரகடனப்படுத்தியிருக்கிறோம்.

நமது பிரகடனத்தை அறியாமலிருக்க முடியாது, காமராஜர்! தமிழ் நாட்டின் தலைவர் அவர்—அன்றாடம் தினசரிப் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்க்கக் கூட நேரமில்லாமலிருக்காது அவருக்கு! எனினும், சைகிள் ஏறத் தெரியாதவனிடம் சைகிளைத் தந்தால் மரத்தில் ஒரு சமயம் மோதியும் குட்டிச் சுவரில் ஒருமுறை முட்டிக் கொண்டும் விட்டுச் செல்வானே, அதைப்போல நடந்து கொள்கிறார், அவர்!

X X X

நாச வேலைக்காரர்கள்!—நாட்டில் காங்கிரஸ் கட்சியின் போக்கையும் ஆட்சியின் கோளாறுகள் குறித்தும் குற்றஞ் சாட்டினால், இந்தப் பழிச் சொல்லை வீசுவது, காங்கிரஸ்காரர்களின் தினசரி பழக்கமாகிவிட்டது. புலியைப் பார்த்து குள்ளநரி என்று கூறினால், கூறுபவனை 'கோளாறுள்ளவன்' என்று சந்தேகிப்பரே தவிர, 'ஆமாம்' என்று ஒத்துக்கொள்ள மாட்டார்கள், எவரும்!

ஆனால், ஆளவந்தாரும், காங்கிரஸ் தலைவர்களும் சுலபமாக வீசிவிடுகின்றனர்—இந்தப் பழிச் சொல்லை!—வேறு எதுவும் சுமத்தமுடியாத காரணத்தால்.

வேதனையொழிந்து, இன்பம் மலரவேண்டும் என்று இலட்சியம் கொண்டோரையெல்லாம் இந்தக் குற்றச்சாட்டின் மூலம்—அழித்து ஒழித்து அரசியல் அனாதைகளாக்கிவிடலாம், என்று கனவு காண்கின்றனர், 'கனம்'களும், காங்கிரஸ்காரர்களும்.

நாட்டின் மிகப் பெரிய கட்சிகளில் ஒன்றாக இருக்கும் காரணத்தாலும், தங்கள் கட்சியைச் சேர்ந்தோரே ஆட்சியை நடத்திச் செல்வதாலும், வெகு சுலபமாகி விடுகிறது, எதிர்க் கட்சிக்காரர்கள்மீது குற்றச் சாட்டை வீச.

மனித உரிமைகள் குறித்துப் பேசி, இதைமதிக்கவேண்டும் ஆட்சிப் பீடத்திலமர்ந்தோர் என்று எதிர்க் கட்சியினர் கூறினால், அதை எதிர்க்கச் சுலபமாக வழி கண்டு விடுகிறார்கள், 'நாசவேலைக்காரர்'கள் என்று கூறி விடுவதன் மூலம், சுதந்திரம் குறித்துப் பேசி—போராடி-வெற்றி கண்ட 'வீரர்'கள்!

ஆட்சியாளரின் அடக்குமுறையைக் கண்டித்தால், அவர்கள் போக்குக் கூடாது எனக் கூறினால், உடனே கூறுபவர்களுக்குப் பட்டம் 'நாசவேலைக்காரர்கள்.'

குற்றச்சாட்டை மறைக்க, வக்கும் வழியுமற்ற காங்கிரஸ் 'கனம்'கள், பொய்யையும், ஆத்திரத்தையும் தங்களது ஆயுதங்களாக்கிக் கொள்கிறார்கள்.

நாசவேலை செய்கிறார்கள்—என்று மக்களிடம் கூறி, எதிர்க் கட்சிகளை, மக்களிடம் நடமாடாமல் செய்து விடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள்!

அர்த்தமற்ற ஆசை மட்டுமல்ல, ஆளவந்த கட்சியாருக்கு ஏற்பட்டிருப்பது அற்ப ஆசை!

* * *

கம்யூனிஸ்டுகளின் பலாத்காரப் போக்கு ஒரு சாக்காக ஆகிவிட்டது. அதைச் சுட்டிக் காட்டி, அதே நேரத்தில், அமைதியே கட்சி வாழ்வு என்று பணியாற்றும் 'பசு' போன்றவர்களையும் 'பாருங்கள், புலி!' என்று காட்டிப் பயப்படுத்த முயற்சிக்கிறார்கள்—முயலுக்குக் கொம்பு முளைக்கச் செய்யும் முயற்சி! வெற்றி தராது, எனினும் வீணாசை விட்டபாடில்லை!

காங்கிரஸ் கட்சியை அகில இந்திய ரீதியில் எதிர்த்து நிற்க—துரதிர்ஷ்டவசமாக இந்திய நாட்டில் பெரிய எதிர்க் கட்சியொன்றுமில்லை. எதிர்க்கட்சி யில்லையே தவிர, எதிர்ப்பிருக்கிறது! காங்கிரஸ் ஆட்சியின் போக்குக்கு ஏராளமான எதிர்ப்பு, மக்கள் மன்றத்திலே உருவாகியிருக்கிறது — மலைபோல வளர்ந்திருக்கிறது!

வளர்ந்திருக்கும் அதிருப்தியை ஒன்று திரட்டி வேலை செய்ய, அகில இந்தியாவுக்கும், சரியான வன்மை வாய்ந்த அரசியல் கட்சி இல்லை. கம்யூனிஸ்டுக் கட்சியோ—தனது காட்டுப் பாதையின் மூலம், மக்கள் அன்பைப் பெறுவதற்குப் பதில், ஆத்திரத்தைப் பெற்று வருகிறது, தினசரி. சோஷியலிஸ்டுக் கட்சியும், ஆங்காங்கு ஓரளவு ஆதரவுள்ளதாக இருக்கிறதேயொழிய, அவ்வளவு பெரிய கட்சியாக வளரும் வாய்ப்பில்லாமலிருக்கிறது. அடுத்து பல அரசியல் கட்சிகள் இருந்தாலும்—அவை காங்கிரஸை எதிர்க்கும் அளவு அவ்வளவு சக்தி வாய்ந்தவையாக இல்லை!

இந்த நிலை—காங்கிரஸ் 'கனம்'களைக் கண்டபடிப் பேசச் செய்யும் துணிச்சலைத் தந்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில், தென்னாட்டைப் பொறுத்தமட்டிலும், திராவிடரியக்கம் மகத்தான எதிர்க்கட்சியாக உருப்பெற்று வருகிறது. அரசியல் இலாபத்தைத் தங்கள் இலட்சியமெனக் கொள்ளாமல், பதவி வேட்டையைத் துச்சமென மதித்து, மக்களின் சமுதாய பொருளாதாரத் துறைகளில், மறுமலர்ச்சி காண வேண்டும் என்ற ஒரே ஆசையுடன் பணியாற்றுவதால், திராவிட இயக்கம் பெருமிதவெற்றியுடன் வளர்ந்து வருகிறது—இந்த வளர்ச்சி, வல்லானை காங்கிரஸ் கட்சியைக் கவலைக்குள்ளாக்கி வருகிறது. மத்திய சர்க்கார் முதல் ஏனைய மாகாணச் சர்க்கார்கள்வரை, திராவிடக் கிளர்ச்சியைக் கவலையோடு கவனிக்கவேண்டிய புது நிலை மலர்ந்திருக்கிறது.

மத்திய சர்க்கார் மந்திரி திவாகர், காங்கிரஸ் பிரமுகர் ஆசார்ய நரேந்திர தேவ், வங்க முன்னாள் பிரதமர் பி. சி. கோஷ் போன்றோர் அண்மையில், கடந்த இருவாரங்களில் 'ஆரிய திராவிட' பிரச்னையைக் குறித்துப் பேசியிருப்பவை—எவ்வளவு தூரம் வடநாட்டினரின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது என்பதைக் காட்டுவதாகும். காங்கிரஸ் கட்சியினர் என்று மட்டுமல்ல, வடவர் ஆதிக்கத்திலுள்ள சோஷியலிஸ்டுக் கட்சியினருங்கூட திராவிட இயக்கத்தின் அபரிமித வளர்ச்சியைக் கண் கொட்டாது கவனிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

உரிமை முழக்கம் என்ற வித்து இன்று பெரிய ஆலமரமாக வளர்ந்து கொண்டே போகிறது—வளர்ச்சியைக் காணும் காங்கிரஸ் தலைவர்களோ, 'வக்கிரபுத்தி'யைத் துணைக்கழைக்கத் திட்டம் தீட்டுகிறார்கள்.

பலாத்காரப் பாதையில் செல்வதாகக் குற்றம்சாட்டி தங்கள் அடக்குமுறை என்ற பலி பீடத்திலே திராவிடரியக்கத்தின் எதிர்காலத்தைக் கொண்டு நிறுத்த—திட்டம் தீட்டுகிறார்கள்.

இந்த அற்ப ஆசையின் விளைவாகவே நாசச் செயல்கள்புரியும் கட்சிகளில் ஒன்றாக நமது இயக்கத்தின் பெயரையும் அடிக்கடி உச்சரித்து வருகின்றனர். அதன் காரணமாக — நாசகாரிகள்! என்ற நெஞ்சறிந்த பொய்யைத் துணிந்து கூறத் தலைப்பட்டிருக்கிறார், நண்பர் காமராஜர்.

அற்ப ஆசை இது. பயனளிக்காது, சாவுக் குழியில் விழுந்துகொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்றிவிடாது! ✻

7-ம் பக்கத் தொடர்ச்சி

விரட்டிவிட்டார்கள்!' என்று கூறலாம். மக்கள் அனுதாபம் எழும்பும்—அதன்மீது தனிக் கட்சியொன்றை உருவாக்கிக் கொள்ளலாம்! உருவான எதிர்க் கட்சியில்லாத நேரத்தில் காங்கிரசிலிருந்தே பிரிந்து ஒரு புதுக்கட்சி அதுவும்—நியாயத்துக்காகப் போரிட்டோரால் (!) உருவான கட்சிக்குச்செல்வாக்கு கிடைக்குமல்லவா!"

"நாகா! உன் புத்திக்கூர்மைமெச்சக் கூடியதுதான். ஆனால், மகாதேவர் உன்னைக் கூப்பிட்டுச்சமாதானம்செய்தல்லவா விட்டார்" என்றேன், சிலேடையாக! "பிரகாசத்தை, மேலிடம் சமாதானப்படுத்தி விட்டதாக இன்று செய்தி வந்திருக்கிறதே, அதைச் சொல்கிறாயா?"

"ஆமாம்!"

"இதனால், தகாராறு கொஞ்சநாட்களுக்கு வெளிக்குக் கிளம்பாமல் இருக்குமே யொழியத் தனிக் கடை வைக்க வேண்டுமென்ற ஆசை மறைந்துபோய்விடாது, நண்பா!" என்று சொல்லிவிட்டுப் போனான்—நானும் எடுத்தேன் பேனாவை சிறிது யோசனையோடு! ✻

# மன்னிக்க முடியாது!

ஐம்பதினாயிரம் கொடுக்கத் தீர்மானித்தார்களாம்—அதையேற்றுச் சரியென அங்கீகாரமும் செய்துவிட்டதாம், அரசாங்கம்!

கட்டிய மனைவி, கஞ்சிக்கில்லையென்று கதறி அழ, மறைந்த மாதாவின் மனதைத் திருப்தி செய்யப் போகிறேன் என்று கூறி, மயானத்தில் எருக்கஞ் செடியைப் பயிரிடச் சென்றால், எவ்வளவு விசித்திரமாகவும் வேதனையாகவும் இருக்குமோ, அதையும் மிஞ்சுகிறது இந்த நடவடிக்கை!

மறைந்த உத்தமர் காந்தியடிகளின் நினைவுச் சின்னமாக, சென்னைக் கடற்கரையில் ஒரு ஸ்தூபி கட்ட முடிவு செய்யப்பட்டு, ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன, சென்னையில். மந்திரிகள் உட்படப் பல காங்கிரஸ் பிரமுகர்கள்தான் இந்த ஸ்தூபி கட்டும் கமிட்டியின் உறுப்பினர்கள்,

மொத்தம் ஐந்து இலட்ச ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

நிலப் பிரபுக்களும், சந்தர்ப்பவாதிகளும், மந்திரிகளின் 'ஆசைக்கு' ஆட்பட விரும்புவோரும் அள்ளிக் கொடுக்கத் தயாராகத்தானிருப்பார்கள்.

ஆனால், இந்த ஸ்தூபி கட்டும் நிதிக்கு, சென்னைக் கார்ப்பரேஷன் ரூ. 50,000 வழங்க முடிவு செய்ததும், அதைச் சென்னை சர்க்கார் அங்கீகரித்திருப்பதும், மிக மிக வேடிக்கையாகமட்டுமல்ல, வேதனையாகவும் கூட இருக்கிறது!

காந்தியார் — இந்திய மக்களின் இதயத்திலே இடம் பெற்றுவிட்டவர். ஏழைகளின் பங்காளனாகயிருந்து, ஏழைகள் கோழைகளாக இருக்கும் நிலை மாறி, இன்பமாக வாழவேண்டும் என்று பாடுபட்டவர். அத்தகைய மனிதருள் மாணிக்கம் மறைந்த பிறகு, அவரது பெயரை, அரசியல் பட்டுப் பூச்சிகளும், வெட்டுக் கிளிகளும், தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொள்ளத் துவங்கிவிட்டன. இந்தக் கொடுமையின் ஒரு காட்சிதான்—

ஐந்து இலட்ச ரூபாயில் ஸ்தூபி! அதற்கு ரூ. 50,000 தரக் கார்ப்பரேஷன் செய்திருக்கும் முடிவு!

X X X

எல்லோரது இதய பீடத்திலும் அமர்ந்துவிட்ட காந்தியாருக்கு நினைவுச் சின்னம் ஒன்று தேவையா, தேவையில்லையா என்பதுகூட அல்ல நாம் கூற விரும்புவது. பணம் படைத்தோரும், சாகசத் தியாகிகளும், இன்றுள்ள நிலையில், அதுவும் ஆட்சியாளர்கள் ஆதரவு இருக்கையில, ஐந்து இலட்சம் திரட்டுவது என்பது அவ்வளவு கஷ்டமான காரியங்கூட அல்ல! ஆனால், இத் திருப்பணிக்கென, எப்பொழுதும், 'ஏழை என் செய்வேன் சர்க்காரே! பாராமுகம் சரியோ சர்க்காரே!' என்று பஞ்சப் பாட்டும், வேதனைக் கீதமும் எழுப்பிக்கொண்டிருக்கும் சென்னை கார்ப்பரேஷன் ரூ. 50,000 தானம் செய்ய முன் வந்தது—வேடிக்கையானதல்ல, மக்களின் வரிப் பணத்தைக் கரியாக்குவது! விளைவு தராத வேதனை நிரம்பிய செயல்.

கார்ப்பரேஷனின் இந்த முடிவு குறித்து, தேசீய இதழ் "தினமணி" தலையங்கம் தீட்டித், தனது கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. இப்போது இம்முடிவு குறித்து, 'தமிழ் மணி' தீட்டுகிறது அது இது:—

"ஊரார் நெய்யே, அள்ளிவிடுகையே என்பார்கள். உன்வீட்டு நெய்யாக இருந்தால்தான் அதன் அருமையும், மதிப்பும் தெரியும். ஊரார் நெய் என்றால் தாராளமாக அள்ளிவிடத்தான் தோன்றும். சென்னைக் கார்ப்பொரேஷன் அப்படித்தான் அள்ளிவிடுகிறது. சென்னைக் கடற்கரையோரத்தில் கட்டவிருக்கும் காந்தி ஸ்தூபிக்கு சென்னைக் கார்ப்பொரேஷன் கலைக்காக 50,000 ரூபாய் நன்கொடை அளிக்கத் தீர்மானித்திருக்கிறது. அந்தத் தீர்மானத்தைச் சென்னை சர்க்காரும் கொஞ்சம் கூட முன்யோசனையின்றி ஒப்புக்கொண்டிருக்கிறது; இது தவறு. ஏன்? காந்திஜி பெரிய மகான்; அவர் உலகம் போற்றும் உத்தமர். நமது நாட்டின் தந்தை. அதில் சந்தேகமில்லை; அவருக்கு ஒரு ஸ்தூபி அல்ல, ஆயிரம் ஸ்தூபிகள் கட்டினாலும் தகும். அதற்காகக் கோடானுகோடி ரூபாய் வசூலித்துக் கட்டலாம். நம் நாட்டிலே பணக்காரர் இருக்கிறார்கள், அவர்கள் ஆயிரக் கணக்கில், லட்சக் கணக்கில் நன்கொடை கொடுக்கலாம். ஏழை எளிய மக்களும், அவர்களாலான சிறு நன்கொடைகள் அளிக்கலாம். அந்த நன்கொடைகளைக் கொண்டு, சென்னையில், நூறு அடி உயரத்தில் அல்ல, 1000 அடி உயரத்தில் ஒரு சிறந்த ஸ்தூபி கட்டலாம். அது நமது நாட்டின் தந்தைக்குச் சரியான ஞாபகச்சின்னமாகும், இதை எல்லோரும் மனமார வரவேற்பார்கள்; ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆனால், இந்த ஸ்தூபிக்கு சென்னை கார்ப்பொரேஷன் 50,000 ரூபாய் ஏன் நன்கொடையளிக்க வேண்டும்? அது யார் பணம்? சென்னையிலேயுள்ள ஏழை எளிய மக்களின் வரிப்பணம். அதைக் கார்ப்பொரேஷன் அங்கத்தினர்கள், அவர்கள் மனம்போல் அள்ளிவிட என்ன உரிமை இருக்கிறது? காந்தி மகானுக்காக மனமுவந்து நன்கொடையளிக்கவேண்டியதுதான். அதற்கு 500 ரூபாய் போதாதா? எதற்காக 50,000 ரூபாய் வாரியிடவேண்டும். இந்த டாம்பீக டம்பாச்சாரித்தனத்தைச் சென்னை சர்க்கார் கண்டித்து இடித்துக்காட்டாமல் ஏன், அதை அப்படியே ஒப்புக்கொண்டார்கள்? ஆம்; அவர்கள் பணமா? அவர்கள் பணமாக இருந்தால்தானே அந்தப் பணத்தின் அருமை தெரியும்; அது மக்கள் வரிப்பணந்தானே? அதைப்பற்றி அவர்களுக்கு என்ன அக்கரை வந்தது?

கார்ப்பொரேஷன் 50 ஆயிரம் ரூபாய் அள்ளிக் கொடுத்துவிட்டால், கார்ப்பொரேஷன் அங்கத்தினர்களுக்கும், அதிகாரிகளுக்கும் சிறந்த தேச பக்தி இருக்கிறது, காந்திஜியிடம் அவர்களுக்கு நிறைந்த அன்பு இருக்கிறதென்று அர்த்தமாகிவிடுமா? அவர்களைச் சென்னை மக்கள் எல்லோரும் போற்றுவார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்களா? கார்ப்பொரேஷன்

(9-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை

# மனப் போர்

தில்லை வில்லாளன்

கண்களைக் கம்பியில்லாத தந்தியென்பார்கள். அந்தத் தந்தியிலே கூட அவன் பேசியதில்லை. இரண்டாண்டுகள் வாய்மூடி ஊமையாகி, கண்மூடிக்குருடாகிசெவியடைத்துச் செவிடாகி...இப்பொழுதுகைநீட்டிக் கடிதம் வரைந்தால காதல் வந்துவிடுமா? காதல், காலத்திலே விதையிட்டுப்பயிராக்கிக்,களைநீக்கி அறுக்க வேண்டிய நெற்கதிரல்லவா? காகிதத்திலே விளைந்துவிடுமா? காகிதத் தூதிலே காதல கிடைத்து விடுமாஞல், இதுவரை எழுத்தாளர்கள் எழுதிக் குவித்த கதைகளெல்லாம் வெறும் எண்ணப் பிசகுகளா? அவை அத்தனையும் சொல்லோடு நின்றுவிடும் இனிக்கும்பிரமைகளா? அவைகளைப்போல நடப்பதில்லையா? நடக்காத, நடக்கமுடியாத செயல்களைத்தான் எழுத்தாளர்கள் எழுதிக் குவித்தார்களா?...கடிதத்திலே, அதிலும் திடீரென எழுதும் ஒரு கடிதத்தில் காதல பிறந்துவிடும் என்று எண்ணுவது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்?

எதிரிக் கோட்டையிலே புகுந்து அவர்களின் கண்களிலே மண்ணைத் தூவிவிட்டுத், தன் இன்பப் புறுவை எடுத்துக் கொண்டு பறந்து விட்டானுமே குதிரையில்......பிருதிவிராஜ் என்ற மன்னன், அவன் அப்பொழுது அதிகப்பிரசங்கியா? கடிதத்திலே காரியம் சாதிக்கத்தெரியாதவனு? அல்ல, அல்ல, அப்படியல்ல, வேலனின் வேதனைமிக்க காதல் முற்றுகை......அவன் சிறந்த அறிவாளி, சிந்தனைக்காரன். அவன் மனதிலே காதல் விதைதூவ முனைந்த பெண் உழவர்கள் பலர், நிலத்திலே இறங்கவும் முடியாமல் ஓடி விட்டனர்! ஆனல் வி.லி ஒருவளால்தான் அது முடிந்தது. விதையிட்ட அவளை விளைவை அறுக்க அழைக்கவேண்டும். இது, முறை, அறநெறி! அதற்காக அறிஞன் கையிலே உள்ள புறு, கிளி, அன்னம், தோழி, பாங்கன்... எல்லாம் அவனது எழுதுகோல், எழுத்து, கற்பனை......! ஆகவே அதைத்தூதாக்கினன். அந்தத்தூது வெற்றி பெறும் என்ற நம்பிக்கையும் இருந்தது அவனுக்கு ஏன்? அவன் விரும்பியது அறிவை, அறிவுமுறையால் கவர முயற்சி செய்தான். இதில் தவறென்ன?

சேரன் சிந்தித்தான். வேலன் இடையிடையே இது போன்ற கருத்துக்களைச் சொல்லிக் கொண்டு வந்தான் வழி நெடுகிலும்! வண்டியும் மதுரை வந்துவிட்டது. அவர்கள் மிகவும் ஆழ்ந்து பேச்சிலே மூழ்கியிருந்ததால்காலம் போனது அறியாமல் இவ்வளவு விரைவிலே வந்துவிட்டதே என்று ஆச்சர்யப் பட்டார்கள். ஆனல் பக்கத்து பலகையிலிருந்து இறங்கியவர் பெருமூச்சோடு கட்டைவண்டி, ஒரு மாதிரியாக வந்து சேர்ந்தது என்று குறைபட்டுக்கொண்டே இறங்கினர். ஒரே நிகழ்ச்சி; இருவேறு கருத்துரைகள்...இதுதான் உலகம்..... இதை ஏன் பலர் புரிந்து கொள்வதே இல்லை!

சேரன் இறங்கியவுடன் நேராக அந்த வீட்டிற்குப் போக விரும்பவில்லை. முதலில் ஒரு உணவு விடுதியில் அறை வாடகைக்கு வாங்கிக் குளித்தபிறகே போகவேண்டும் என்று திட்டமிட்டான். வேலனும் அதுவே சரியென்று 'ஆமாம்' பூசாரியானன். ஆகவே அவர்கள் வ. உ. சி. உணவு விடுதியில் தங்கினர். பெட்டி பைகளை அறையில் போட்டுவிட்டுக் குளித்து முடித்தனர். வேலனை நல்ல முறையில் சேரனே அலங்காரம் செய்தான்.

"நண்பரே, என்னுடன் இப்பொழுதே வருகிறீரா......?"

"இல்லை...நான் எப்படி வருவது? அவள்தான் விடையே எழுதவில்லையே!"

வேலன் சொல்லிய விடையைக் கேட்ட சேரன் சிந்தித்தான். அவன் மனதிலே ஒரு எண்ணம் மின்னவிட்டது. அந்த மின்னலின் பளபளப்பு அவனது முகக் கண்ணாடியில நன்றாகத் தெரிந்தது!

"அப்படியானல் இங்கேயே இருங்கள்.........இன்று மாலை நீர் பார்க்க விழையும் 'டாக்டர்'...லில்லியம்மை உங்களைச் சந்திப்பார்!"

அவன் மகிழ்ச்சியை, உடனே எடுத்துப் பற்றவைத்த 'சிகரெட்'டின் புகைவழியாகக் காட்டத் தொடங்கிவிட்டான்! சேரன் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினன்.

## பிச்சைக்காரி...

சேரன் போய் சில மணித்துளிகளுக்கெல்லாம் இனிமையாகப் பாடும் ஒரு பெண்ணின் குரல் கேட்டது! அவள் குரலின் இனிமை வேலனை வெளியில் இழுத்தது! அவன் வெளியிலே வந்தான். ஆ..............அவள் ஏன் பிச்சையெடுக்கவேண்டும்? அவள் கரத்திலே ஒரு சின்னஞ் சிறு குழந்தை! அவளோ மாசுபடிந்த மாணிக்கம்.........அவளிடம் பலர் அழகுப் பிச்சைகேட்க வேண்டும்! ஆனல், தன் வயிற்றைக் கழுவ தெருத் தெருவாகப் பிச்சையெடுக்கிறள்! பரிதாபம்.........அவளுக்கு வாழ்க்கையை நடத்த வேறு வழியே இல்லையா? ஏற்பது இகழ்ச்சி என்பது நம் இனச்சித்தாந்தம் என்பது அவளுக்குத் தெரியாத பொன்மொழியா? கைநீட்டி யேற்பது எப்பொழுதுமே இழிவானசெயல்என்று அவள்மனம் அவளுக்குச்சொல்லவில்லையா? அவள் அறிந்திருப்பாள்...அதனல அவள் உரக்கக் கூவிப்பிச்சை கேட்கவும் வெட்கப்படுகிறள். வெட்கத்தைப் பார்த்தால் பசியப்பர் 'சும்மா' விடுகிறரா? ஆதரவற்ற ஒரு

பெண் இந்தஉலகில் தனியாக என்ன செய்யமுடியும்? தேவை 'தேவன்' பசி என்ற நோயைப் பெருக்கிவிடுகிறான்! அதற்கு வேண்டிய மருந்து வேண்டுமானால், பாவகாரியங்களிலே தான் அவள் ஈடுபடவேண்டும்! திருடலாம்......மனதில் தைரியமும், உதைவாங்க உடலில் உறுதியும் இல்லை! கொலை செய்து கொள்ளையடிக்க அவளிடம் கொடூரமோ, அதற்கேற்ற உடற்கட்டோ, உள்ளத்திண்மையோ, பயப்படாத் தன்மையோ கிடையாது......குழைவும், நெளிவுங் கொண்டே செய்யப்பட்ட பெண்! பொய் சொல்லலாம்......ஆணாக இருந்தால் அதனால் வாழ்வடைய வசதியுண்டு! ஆம், பெண்ணுக்கு ஓரே ஒருவழி, காலிகள் காட்டிய பெருவழி......அதுதான் பாதகங்களிலே மகா பாதகம், பாவங்களின் அரசன், கொடுமைகளின் தாய், சமூக சலித்தனங்களின் குழந்தை ......விபசாரம்......! அதை அவள் செய்யவிரும்பவில்லை ஆகவே,பிச்சை எடுக்கிறாள்!

மதனராசா, காமாந்த காரா...... ...மாதரென்றால் மதவெறியோடா.... என்ற சினிமாப் பாட்டை பாடிக்கொண்டே வந்தாள். பிறகு அவள் பாடிய பாடல்கள் எல்லாம் 'கத்தரிக்கோல்' என்று பெயர் போட்டுக் கொண்டு தொகுப்புகள் என்று வெளியிடுவார்களே, அது போன்ற சினிமா பாட்டுத் தொகுப்பு! அது அவள் அளிக்கும் பரிசு, தனக்குப் பிச்சையளிக்கும் பிரமுகர்களுக்கு! அவள் வேலன் நின்ற இடத்திற்கே வந்து பாடினாள்......உனைக்கண்டு மயங்காத பேர்களுண்டோ...என்று தொடங்கி......மெய்க்காதல் ஒன்றிருந்தால் எது வந்தால் என்னே என்னே......என்பதாக மாறி...... சாமி உமையடைய என்ன தவம் செய்தேன்......என்று திரிந்து,...... இந்த இன்பமே சொந்தமதானால் வானுலகம் வேண்டேன்......என்று ஓடி, அந்தோ பிரிந்தாரே, என் ஆசைக் காதலர்......என்ற அடியாகி, எப்போ வருவார் என் கலி தீர்க்க... என்று இசைத்து, பெண்ணாய் ஏன் பிறந்தேன்......என்று ஒருவாறு முடித்தாள்! வேலனுக்குச்சங்கடமாக இருந்தது. இங்கு கதாநாயகன், கதாநாயகி யாரென்று அவனுக்குப் புரியவில்லை! அவன் அவளைப் பார்த்து மிகவும் பரிதாபப்பட்டு, தன் பையிலிருந்த ஒரு ரூபாயைக் கொடுத்தான். அதை அவள் கண்டதும் மிரண்டுவிட்டாள். அதை வாங்கவே மறுத்துவிட்டாள். வேலனுக்கு ஒன்றுமே புரியவில்லை!

"ஐயா எனக்குக் காலணா, அரையணா கொடுக்கிற கருணையாளர்கள் போதும், ஒரு ரூபாய் இரண்டு ரூபாய்கள் கொடுத்துப்பிறகு வருகிறாயா" என்று அழைக்கும் 'அதிகக்' கருணைகாட்டுவோர்கள் வேண்டாம்" என்றாள்.

"பெண்ணே, வேதனை மிகுதியினால் பேசுகிறாய்...நான் அந்தக் காலிகள் கூட்டத்திலே நிற்கவேகூசுபவன். பணத்தைக் கொடுத்து,உன்னைப்பலியிட அழைக்கமாட்டேன், வாங்கிக்கொள், பின் உன் விருப்பம் போல் போ" என்றான்.

அவள் அழுதாள். அவன் தேற்றினான்.

"உன் பெயர் என்ன அம்மா"

"சகுந்தலை" என்றாள்.

குழந்தை அழ ஆரம்பித்துவிட்டது. அதை அமைதிப்படுத்திக் கொண்டே நகர்ந்து விட்டாள்!

## மறந்தவை

லில்லி தன் தோழி பாக்கியத்தைக் கண்டவுடனேயே மகிழ்ச்சிச் சிறகுகளைக் கட்டிக்கொண்டு பறக்க ஆரம்பித்துவிட்டாள்.

"பாக்கியம், நானும் ஒருமாத ஓய்வு பெற்றுவிட்டேன். முப்பது நாளும் என்னுடன் இருக்கவேண்டும்!"

"அறுபது நாளானாலும் அசைய மாட்டேன். நீயாகப் பிடித்துத் தள்ளினால்தான் போவேன்"

"அது சரியடி அம்மா......என்னை ஏமாற்றவே திட்டமிட்டு வந்தாயா? 'அவர்' எங்கேடி? எனக்குக் காட்டக் கூடாதா?"

"லில்லி...நிச்சயமாக வருவார்!"

இப்படிப் பேசிக்கொண்டார்கள். அன்று முழுவதும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தார்கள் என்று சொல்லி நிறுத்துவதேபோதும்! தங்கம்மா தன் சொந்த வீடு போலவே வீட்டின் உள் பகுதிக்குச் சென்று வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டாள்!

அன்றுமாலை டேவிட் தனது கருப்புக்கோட் வகையறாவைக் களைந்துவிட்டு வந்து உட்கார்ந்தார். லில்லியும், பாக்கியமும் எதிர்ப்புறத்தில் போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்திருந்தனர். பாக்கியத்தைத் தன் தந்தைக்கு அறிமுகப்படுத்தினாள் லில்லி. அவரும் அன்பு வார்த்தைகளால் அவளை வரவேற்றார். அவள் வரவால் தன்மகளின்மகிழ்ச்சி எல்லையைக் கடந்துவிட்டது என்று குறிப்பிட்டார். தன்மகளின்மகிழ்ச்சியொன்றே தன் வாழ்க்கையின் இலட்சியம் என்று எடுத்துக்காட்டினார். பிறகு பாக்கியமும், லில்லியும் அவருடைய அனுமதியின்பேரில் வெளியில் கிளம்பிவிட்டனர்.

டேவிட் ஏதோ ஒரு வழக்கு சம்பந்தமான கட்டுகளைப் புரட்டிக்கொண்டேஇருந்தார். அப்பொழுது யாரோ ஒருவன் தன்மேல் வேட்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு வணக்கம் தெரிவித்தபடியே உள்ளே நுழைந்தான்!

"வாப்பா வடிவேலு.........உன் வழக்கு சம்பந்தமாகத்தான் பார்க்கிறேன்......இப்படிப் பலகையிலே உட்கார்!"

அவன் உட்கார்ந்தான்.

"ஐயா, எப்படியும் ஜீவனாம்சம் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிடணுங்க! வடிவாம்பாள்என்பொண்சாதிதான்......அவள் நடத்தையிலே சந்தேகமுங்க. அதுக்கு ருசு வேணுமின்னு, இரண்டு வருசத்துக்குமுன்வரை அவள் ஆசையா வளர்த்தபெண் சகுந்தலைதானுங்க ......நான் சிங்கப்பூரிலிருந்தபோது அவள் எப்படியோ பெற்று, எங்கேயோ வளர்க்கச்செய்து இப்படி சேர்த்துக்கிட்டாங்க......... இப்படி வழக்குப் போகணுங்க......!

அடுப்பங்கரையிலே சமைத்துக் கொண்டிருந்த அந்த வீட்டு வேலையம்மாளுக்குத்துணை செய்துகொண்டிருந்த தங்கம்மாவின் காதுகளில் இவர்களின் உரையாடல் தெளிவாக விழுந்தது! அவளுக்குஇரண்டுகுரல்களும் பழகியவை போலவேபட்டன. ஆகவே அவள் மனந்துடித்தது. அவர்கள் யார் என்று பார்க்கவேண்

டும் என்ற ஆவலால் உந்தப்பட்டு வெளியில் வந்தாள்......அவ்வளவு தான் அவள் திகைப்புப்பிம்பமானாள்! அவளால் அவள் கண்களை நம்பவே முடியவில்லை. அவள் கண்களைத் துடைத்துக்கொண்டாள்......இமைகள் பட படவென அடித்துக்கொண்டன. விழிகள் பெரிதாக வளர்ந்துவிட்டன! ஆம், அவளால் நிற்கவும் முடியவில்லை...... அந்தச் சந்திப்பை அவள் விரும்பவும் இல்லை. எதிர்பார்க்கவும் இல்லை! அவளின் துன்ப வாழ்விலே கோரநாட்டியம் போட்ட யானைகள்......இன்ப வேதனையில் பங்குகொண்ட இரண்டு பசித்தபுலிகள்......அங்கே உட்கார்ந்திருப்பதை அவள் ஏன் பார்க்கவேண்டும்? இரண்டு பாவிகள் அங்கே கூடிப் பேசுகிறார்கள்!

## மதுரை

பாக்கியம் மதுரைக்கு வருகிறாயா ......என்று அழைத்தபோதே தங்கம்மா அழுதுவிட்டாள். மதுரை என்ற பெயரை மறக்கமுடியுமா? மறக்கக்கூடிய, மறக்க வேண்டிய பெயரா அது.........ஒரு வீரனின் பெயர், ஒரு தன்மானத் தமிழனின் பெயர்! அவளின் ஆசைக்காதலனின் பெயர், மதுரை! ஆம், மதுரை என்றவுடன் மதுக்குடம் பொங்குவது போல அவள் உள்ளக்குடம்பொங்கி வழிந்தது, பூரித்துப் பெருகிற்று!

மதுரை இப்பொழுது எங்கே? இறந்தானா.....இருக்கிறானா? அவளை வெறுத்தோடிவிட்டானா......இவள்தான் அவனைவிட்டுப் பிரிந்துவிட்டாளா? சின்னஞ் சிறுவயதிலிருந்து காதலால் கட்டுண்டு, பெற்றோர்கள் அனுமதியும் பெற்று, ஊராரின்முன்னிலையில் அரைபவுன் தங்கத்தாலி கோர்த்த மஞ்சள்கயற்றினால் உரிமையும் ஆக்கிக்கொண்டான். மதுரை—தங்கம்மா என்றால் பிரிக்கமுடியாத ஜோடிப் புறாக்கள் என்று அவர்கள் கிராமத்து மக்கள் அர்த்தம் எழுதி வைத்துக்கொண்டார்கள்.

வயிற்றுப்பிழைப்புக்காக வந்து சேர்ந்தார்கள் மதுரைக்கு...மதுரை இதோ, கிழவடிவிலே உட்கார்ந்திருக்கும் மாபாவி டேவிட் என்ற 'வக்கிலிடம்தான்' வேலைக்கமர்ந்தான். வீட்டுவேலைகள் அத்தனையும் செய்துமுடிப்பதுதான் அவனுக்குள்ளவேலை..மாடுபோல உழைத்து, கொடுத்த கொஞ்ச தொகையினாலேயே மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்! ஏழை மகிழமுடியும், கிடைத்ததைக் கொண்டு திருப்தி என்கிற பொன்குணமிருப்பதால்......!ஏழ்மையைக் கிழித்தெறியவேண்டும். உண்மை, ஆனால் அதிலேயும் ஒரு புனித திருப்தி பூரணபொலிவுடன் இருக்கமுடியும் என்பதை மறுக்கமுடியாது. தமிழ்நாட்டுப் புலவர்கள் எல்லாம் ஏன்வறுமையிலேவாடினார்கள் என்று கேட்டார்களாம் சிலர். அதனால்தான் அவர்கள் பெருமை அடைந்தார்கள் என்றாராம் ஒரு புலவர்!

சிலநாட்களில், மதுரை மாலை வேளைகளில் தன் அன்புப் பிழம்பான தங்கம்மாவை 'சிவிச்சிங்காரித்துக்' கொண்டு கடைவீதிக்கு அழைத்துச் செல்வான். அவளுக்கு மருக்கொழுந்து, மல்லிகைப்பூ என்றால்உயிர். அவைகளை வாங்கிக்கொடுத்து அவள் மகிழ்வதைப்பார்த்து, அவன் மகிழ்வான்! அப்படி ஒருதரம் போகும்பொழுதுதான் அந்தப்பயங்கர நிகழ்ச்சி, தனது இரும்புக்காலை முதலடியாக பெயர்த்து வைத்தது. அவர்கள் இருவரையும் டேவிட் பார்த்தார்...பார்த்தார்......! அவர்கள் இருவரும், விகாரம் அவர் கண்களில் தலை விரித்தாடுகிறது என்று புரிந்துகொள்கிற அளவு பார்த்தார்! பிறகு பேசினார்......பேச்சா அது, நச்சு நினைப்பு எனும் சாக்கடையில் நெளியும் புழுக்களை உதிர்த்தார்!

"மதுரை......இங்கே வா"

என்று கூறிக்கொண்டே நடந்தார். தங்கம்மா நின்ற இடத்திலேஇருந்துகொண்டு, அவனைப் போகும்படி சாடை காட்டினாள். அவன் அவரைப் பின்தொடர்ந்தான்.

"அடே......இது யாருடா, புது குட்டி"

"என்னங்க...... அப்படி கேவலமாகக்கேக்கிறீங்க.......அவள் என் பெண்சாதிங்க......"

"எத்தனை நாளாக..."

"ஐயா, நீங்க தப்பா நினைக்கிறீங்க. ......நான் தாலிகட்டிய பெண்டாட்டிங்க"

"அது சரிடா......"

அவர் பேசாமல் இருந்தார்...... அவர் முகம் உண்மையை வெளிப்படுத்திற்று. அவர் கண்கள் மனதிலே பிடித்துக்கொண்டிருந்த படத்தைப்போட்டு 'சென்சார் போர்டாருக்கு' விளக்கிக்கொண்டிருந்தது! மதுரை சீறினான்.

"நாளைக்கு மன்மத ஓட்டல் மாடி அறை எட்டாம் என் அறைக்கு அழைத்துவா......வரமிருப்பமில்லையானால் இன்றோடு நின்றுகொள்..."

"அடபாவி......கொண்ட மனைவியைக்கேட்க உமக்கு எவ்வளவுநெஞ்சழுத்தம்......இதைவிட பட்டினிக்கிடந்து சாவேன்! உம் படிப்பில் மண் விழ......உம் பதவியில் இடிவிழ.... நீ மனிதனா, மிருகமா? போய்யா பெரிய மனிதரே!"

இப்படி கத்திவிட்டான். இதை இவ்வளவு சிக்கிரத்தில் எதிர்பார்க்காத டேவிட், வேகமாக நடந்துவிட்டார்.

மதுரை தனது எசமானன் நடந்துகொண்டமுறையை எண்ணிஎண்ணி ஆத்திரப்பட்டான். அதை அப்படியே தங்கம்மாவிடம் வந்து சொன்னான். அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வேலைக்குப் போகாவிட்டால் அவர்கள் எப்படி வாழமுடியும்? புதிய இடத்தில் போய்ச்சேர்ந்தாலும் அந்தப்'பெரிய மனிதர்' அந்த இடத்திலும் கெடுதல் செய்யலாமே! அப்பொழுதுபட்டினி கிடக்கமுடியுமா? பசிக்கவேண்டிய அவசியத்தை என் இந்த ஆண்டவன் ஏற்படுத்தினான்? அந்தப் பசிதான் உலக தேவைகளின் ஊற்றுக்கண்......உலக நடமாட்டத்திற்கு அதுதான் அச்சாணி! அந்தப்பசியை எதிர்த்து எப்படிப் போராடுவது? இப்படி எண்ணினாள். அதற்காக மானத்தை விற்பதா? கற்பை அடமானம் வைப்பதா? அதுவும் முடியாது, இதுவுங்கூடாது! என்ன செய்வது?

(தொடரும்)

# படிப்பகம்

## மத்த விலாசம்

மன்னன் மகேந்திரவர்மனால் வடமொழியில் எழுதப்பட்ட நகைச்சுவை நாடகத்தை மயிலை—சீனி—வெங்கடசாமி தமிழாக்கித் தந்துள்ளார். புத்த, சைவமதம் பற்றிய கேலியும் கிண்டலும் நகைக்சுவை மூலம் தெளிக்கப்பட்டிருக்கிறது இந்நூலில். நல்ல முயற்சி.

விலை 0—6—0

பெறும் இடம்:-C/o சாது அச்சுக்கூடம், ராயப்பேட்டை சென்னை.

✲

## தூக்கு மேடை

ஆசிரியர். மு. கருணாநிதி

ஆட்சியாளரின் "கருணை"க்கு இலக்கான நாடகம் இப்போது நூல்வடிவில் உருப்பெற்றிருக்கிறது. சமுதாயத்தின் நிலைமையும் 'பணம் பெருத்தான்'களின் திமிரையும், தனது கேலி நிரம்பிய ஆர்வ எழுத்துக்கள் மூலம் படம் பிடித்துத் தந்திருக்கிறார், தோழர் கருணாநிதி. தேன்வழியும் கதைப்போக்கு, திகட்டாத ருசி மாளிகை, இந்நூல்!

விலை ரூ. 1—4—0

பெறும் இடம்:- இளங்கோ பதிப்பகம், 8/469 சீர்காழி ரோடு, மாயவரம்.

✲

## காதலர் பாதையில்.....!

ஆசிரியர், மலரோன்

அகநூல் இன்பப் பொழிலிலே கண்டெடுத்த அற மொழிகளின் கருத்துரைகளை கதைவழி விளக்கப்படுகின்றன, இச்சிறு நூலில். தித்திக்கும் தமிழ்நடை; தவழ்ந்து விளையாடும் 'சிறுகதைகள்', நெஞ்சையள்ளுகின்றன.

விலை 0—5—0

பெறும் இடம்:- கலைச்செல்வ நிலையம், 33, நயினியப்ப நாயக்கன் தெரு, சிந்தாதரிப்பேட்டை, சென்னை-2.

x x x

## ஏற்று விளக்கு

ஆசிரியர் ஹுமாயூன்.

மண்கோட்டை, யார் துரோகி, ஏற்றுவிளக்கு ஆகிய மூன்று சிறு நாடகச் சித்திரங்கள், காதலின் வேகத்தைச் சித்தரிக்கும் வகையில் தீட்டப்பட்டிருக்கின்றன, ஆசிரியரால்.

விலை 0—8—0

பெறும் இடம்:- ஷேக் ஹிமான், 17, [illegible]ன் தெரு, ஆத்தூர்.

* * *

## தாவாரம் இல்லை

தமிழ்ப்புலவர் திரு. கா. பொ. இரத்தினம் பி. ஏ. (ஆனர்ஸ்) பி. ஓ. எல். சைவத்தின் சிறப்பை விளக்கி ஆற்றிய சொற்பொழிவின் தொகுப்பு இந்நூல். தமிழ் ஆராய்ச்சியின் விளைவாக எதிரொலிக்கும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. சைவ மதத்தைப் பார்ப்பனீய மதம் அடக்கியது எப்படியென்றும் விளக்கியுள்ளார் இந்நூலில், ஆசிரியர்.

பெறும் இடம்:- பதுளைச் சைவ பரிபாலன சங்கம், சரஸ்வதி அச்சகம், கொழும்பு.

x x x

## ஏ; சதிகாரச் சமுதாயமே!

ஆசிரியர்: நிலாவழகன்.

விதவைத் துயர் விளக்கப்படுகிறது, இச்சிறு கதை நூலில்.

விலை 0—2—0

x x x

## திருக்குறள் ஏன் தேவை?

(நிலாவழகன்)

திறக்குறள் ஏன், யாருக்காக எழுதப்பட்டது என்று விவரிக்கப்படுகிறது, இந்நூலில்.

விலை 0—3—0

பெறும் இடம்:- அன்னை நிலையம் சூளை; சென்னை 7.

## குமரன் பாட்டு

'கண்ணன் என் காதலன்' என்ற பாரதியார் பாடலையொட்டி தோழர் சுப்பு ஆறுமுகம் இயற்றியுள்ள கவிதை நூல்.

விலை 0—2—0

பெறும் இடம்:- அன்பன் நிலையம் சத்திரம், புதுக்குளம், தச்சநல்லூர் போஸ்டு.

## நவநீதம்

தமிழகம் அறிந்த, தோழர் வல்லிக்கண்ணனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்திருக்கும் மாத இதழ் கருத்துக்கு விருந்தளிக்கும் கட்டுரைகளும், கதைகளும், சிறுகுறிப்புகளும் 'நவநீதத்தில்' மிளிர்கின்றன.

விலை அணா 4

முகவரி:- 6, வெங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5.

## நண்பன்

இலக்கிய உள்ளமும், எழுத்து வன்மையும், புரட்சி மனப்போக்கும் கொண்ட நண்பர் கே. அப்துல் கபூர் பி. ஏ. (ஆனர்ஸ்) திருவிதாங்கோட்டிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் நண்பன் வார இதழின் கௌரவ ஆசிரியர். வாணியம்பாடி கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராயிருந்து பணியாற்றும் அவரது மேற்பார்வையில் வெளிவரும் 'நண்பன்' எல்லா அம்சங்களும் நிறைந்து விளங்குகிறது. கேள்வி பதில், ஒரு சிறந்த அம்சம். முற்போக்கு எழுத்தாளர்களின் கருத்தோவியங்களும் நிறைய இருக்கின்றன.

விலை 0—2—0

முகவரி:- 'நண்பன்' திருவிதாங்கோடு தென் திருவாங்கூர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.